விட்டதையறிந்து அந்த ஊரின் வனப்பான தோற்றத்தினுலும் தனது துயரத்தை சற்று நேரம் வரைக்கும் மறந்தவளாக உத்சாகமும் கொண்டாள். வண்டியிலிருந்து இறங்கின ஜானகி அக்கம் பக்கம் ஏரிட்டும் பாராமல், குனிந்த தலை நிமிராமல் ஸ்டேஷனுக்கு சமீபத்திலேயே இருக்கும் தனது தாத்தாவின் இல்லத்தை நோக்கி நடக்கலானுள். சாவித்திரியம்மாள் வழிக்கு என்று கொடுத்த பக்ஷணங்களும் பழங்களுமடங்கிய சிறிய கூடையைத் தவிர ஜானகியிடத்தில் உடுத்த இரண்டாம் புடவை கூட இல்லை.

ஐயோ பாவம் அப்பெண் மடந்தைக்கு இவ்விடமும் துரதிருஷ்டம் காத்திருக்க வேண்டுமா? கிழவர் படுத்த படுக்கையாக படுக்கையில் கிடந்தார். ஜானகியின் அகஸ்மாத்தான வரவைக்கண்ட கிழவர் ஹீனஸ்வரத்தில் "அம்மா ஜானகி வந்தாயா? மாப்பிள்ளை எங்கே?" என்று தட்டுதடுமாறி இரண்டொரு வார்த்தைகள் பேசுவதற்குள் ஜுர வேகத்தினுலும், அந்த அபாய நிலைமையில் திடீரென்று ஜானகியின் எதிர் பாராத வரவினுலும் அதிர்ச்சி ஏற்பட்டு கிழவருக்கு ஸ்மரணை தப்பி விட்டது. ஸ்ரீராம பகவானை இடைவிடாது காத்து சிசுருஷை செய்யும் ஹனுமாருக்கு சமமான கிழவரின் சேவகன் மொட்டையன் அருகிலிருந்தான் கிழவரின் நிலைமையை கண்டு "அம்மா அய்யாவிற்கு பிரக்ஞை போச்சுது! நான் போய் டாக்டர் அய்யாவை அழைத்து வரேன். நீங்க அய்யாவின் கை காலுகளுக்கெல்லாம் இந்த தைலத்தை போட்டு தேயுங்கள். சூடு வரட்டும்" என்று ஒரு தைல புட்டியை ஜானகியிடம் கொடுத்து விட்டு அந்த ஊரிலிருந்த சிறிய கவர்ன்மெண்ட் டாக்டரிடம் ஒரே ஓட்டமாக ஓடினுன். தாத்தாவின் நிலைமையை கண்ட ஜானகிக்கு துக்கம்பொங்கிற்று. கண்களிலிருந்து கண்ணீர் ஆராகப் பெருகிற்று. விம்மி விம்மி அழுத வண்ணம் தாத்தாவின் கைகாலுகளுக்கெல்லாம் மொட்டையன் சொல்லி விட்டு சென்றவிதமே தைலத்தை தடவி தேய்த்துக் கொண்டிருந்தாள். அதற்குள் மொட்டையனும் டாக்டரை அழைத்து வந்துவிட்டான். டாக்டர் வந்து தாத்தாவின் அருகில் ஓர் பெண் உட்கார்ந்து கொண்டு சிசுருஷை செய்வதைக் கண்டு வகையறியாமல் திரு திரு வென்று முழித்தார். பின்பு மொட்டையன் மூலம் ஜானகியின் உறவைக் கேட்டறிந்துகொண்டு கிழவரை பரிசோதித்துப் பார்த்தார். அவர் கிழவரின் மூக்கினருகில் ஏதோ ஓர் மருந்தை முகரசெய்துவிட்டு "ஒன்றும் பயமில்லையம்மா விசாரப்படாதேயுங்கள். 15 நாட்களாக மிகவும் ஜுரம் காய்வதினுலுண்டான பலஹீன நிலைமையில் உங்களை கண்ட அதிர்ச்சியினுல் மூர்ச்சித்து போயிருக்கிறார். இன்னும் ஐந்து நிமிஷங்களிற்குள் பிரக்ஞை வந்துவிடும். நீங்கள் முன்பின் தெரிவிக்காமல் திடீரென்று இவ்விடம் வரநேரிட்டதா என்ன?" என்று வினவினர்.

ஜானகி தலை குனிந்தவாறு, "ஆமாம், நான் வருவது அவருக்கு தெரியாது" என்றாள்.

டாக்டர் "பரவாயில்லை. விசாரப்படவேண்டாம். தாத்தாவிற்கு இன்னுமிரண்டு நாட்களிற்குள் ஜுரம் இறங்கிவிடும். இந்த ரயிலில் தான் வந்தாப்பலே இருக்கு. நம்ப வீட்டிற்கு வந்து சாப்பிடலாம். இதோ நம்ப வீடு எட்டிணுப்பலே தானிருக்கு. கிழவருக்குகூட கஞ்சி, தீர்த்தம் எல்லாம் எங்கள் வீட்டிலிருந்து தான் அனுப்புகிறேன். இதோ நான் போய் என் தாயாரை அனுப்புகிறேன்" என்று எழுந்து சென்றுவிட்டார்.

இவ்விதம் கிழவருக்கு மாதக்கணக்கில் ஜுரம் அடித்த வண்ணமிருந்தது. அந்த திக்கற்ற குடும்பத்திற்கு டாக்டர் ரங்கநாதனும், அவரது தாயார் லக்ஷ்மியம்மாளும் தான் இடைவிடாமல் உபகாரம் செய்து வந்தனர். கடைசியில் கிழவரும் பரலோக பிராப்தியடையவே, ஜானகியின் துயரத்திற்கோர் அளவில்லை. துயரக் கடலில் மூழ்கிக்கிடந்த ஜானகி கிழவர் காலஞ்சென்ற எட்டாம் நாளே ஓர் பெண் மகவை பெற்றெடுத்தாள். சேவகன் மொட்டையன் மனைவி தான் ஜானகியின் அருகிலிருந்து சிசுருஷை செய்து வந்தாள். லக்ஷ்மியம்மாள் கஞ்சி மருந்து முதலியவைகளை கொடுத்து மேல் விசாரணை செய்து கொண்டு வந்தாள். குழந்தை பிறந்து ஒரு மாதத்திற்குள்ளாகவே, சமுத்திரத்தில் விழுந்து தத்தளிப்பவனுக் கொத்த ஜானகிக்கு மிதக்கும் கட்டையாக விருந்த டாக்டர் குடும்பத்தினரும் அவ்வூரை விட்டு சேலம் சென்றனர். டாக்டருக்கு குடியாத்தத்திலிருந்து சேலத்திற்கு மாற்றியிருப்பதாகவும் இன்னும் 10 நாட்களுக்குள் சேலம் போய் சேரவேண்டுமென்றும் அரசாங்கத்தாரிடமிருந்து உத்தரவு வந்து விட்டது. இனி அந்த அபலை என்ன செய்வாள்? தனது பிரத்தியக்ஷ தெய்வங்களாகவிருந்த அந்த குடும்பத்தினரும் தன்னை தன்னந் தனியே தவிக்கவிட்டு சென்றுவிடவேண்டி இருக்கிறதேயென மனந்துடித்தாள். அப்பொழுது பகவான் லக்ஷ்மியம்மாளுக்கு ஒரு புது யோசனை தோன்றச் செய்தார். லக்ஷ்மியம்மாள் ஜானகியுடன் பரிவாகவும், அன்புடனும், அம்மா நாங்களும் சேலம் சென்றுவிட்டால் இவ்வூரில் உன் கஷ்ட சுகங்களைக் கவனித்து உதவி செய்ய முன் வருவோர் ஒருவருமில்லை. நீயும் எங்களுடன் சிவனே என்று புறப்பட்டு வந்து விடு. உனக்குக் கொஞ்சம் சக்தி வந்த பின் எங்கள் வீட்டருகிலேயே தனி வீடு வேண்டுமானுலும் ஏற்படுத்திக் கொண்டு அவ்விடமே இருந்து விடலாம். என் பிள்ளையின் யோசனையும் இதுதான். உனக்கு எப்பொழுதும் எங்கள் கையாலான உதவியை செய்ய தயாராகவிருக்கிறோம்" என்றாள்.

காரிருள் சூழ்ந்த அடர்ந்த கானகத்தில் வழி தப்பி அலையும் ஒருவனுக்கு ஒரு விளக்கின் வெளிச்சம் பளிச்சென்று தென்பட்டால் எவ்வளவு ஆனந்தமுண்டாகுமோ அவ்விதமே ஜானகியின் மனதிலும் இந்த அன்பு மொழியானது ஆனந்தத்தை உண்டாக்கிற்று. அவளது துயர்வுற்ற வதனத்தில் புன்முறுவல் தோன்றிற்று. லக்ஷ்மியம்மாளை நன்றியறிதலுடன் "மாமி நீங்கள் தான் என் தெய்வம். நீங்கள் சொன்னவாறே நடக்க தயாராகவிருக்கிறேன். இந்த பாவி இன்னும் என்ன சொல்ல முடியும்? உங்களை விட்டு இப்புவியில் எனக்கு வேறு யார் உபகாரம் செய்ய கிடக்கிறார்கள்" என்றாள். அதற்குமேல் பேசமாட்டாதவளாய் தாரை தாரையாக கண்ணீர் வடித்தாள். மடியில்படுத்திருந்த குழவி தாயாரை பார்த்து சிரித்து விளையாட, எவ்விதமான ஆறுதலுக்கும் ஆராதவளது தீராதுக்கம் க்ஷண மாத்திரம் மறைந்தது. குழந்தையின் சிரிப்புகலந்த விளையாட்டில் அவள் லயித்துப்போய் க்ஷண நேரம் தன்னை மறந்தாள்.

(தொடரும்.)

ஜம்மியின் லிவர் க்யூருக்கு வந்தனம்

எல்லாவித சிகிச்சையாலும் கைவிடப்பட்ட, முற்றிப் போன ஈரல் குலை பெருக்கத்தினின்றும் என் உயிரை காப்பாற்றியது.

எல்லா மருந்துஷாப்பிலும் கிடைக்கும்.

ஜம்மி வெங்கடரமணய்யா அண்டு சன்ஸ், மைலாபூர் — மதறாஸ்.

சப் ஆபீஸ்: கும்பகோணம்.

பிராஞ்சுகள்: கல்கத்தா, லக்னோ, பம்பாய், பெங்களூர், திருச்சிணுப்பள்ளி, விஜயநகரம்.

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டைகனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோஇருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மல விரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணு. ஒவ்வொன்றும், 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE

CASTOR Oil CHOCOLATES

ஏஜண்டுகள்:—

மெஸர்ஸ்:

சீவ்ராம் & ஸ்வாமி லிமிடெட்,
154, நைனியப்ப நாயக்கன் தெரு,
பி. டி., மதராஸ்.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி" (Regd.)

இது ஒன்றுதான் அசல் விஜய நகரம் மருந்து. குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து. போலிகளைக் கண்டு ஏமாறுதீர்கள்.

Dr. பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாட வீதி, மைலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில், கீழவீதி.

திருச்சி கிளை:— 15, புகழிய் பிள்ளை தெரு, தெப்பகுளம் போஸ்டு.

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி, உண்மையான நல்ல மருந்து வேண்டுமானுல், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினுல் நிவர்த்திக்கத் தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 31 30-8-'42 Price 2 Annas

8

‘காதலி அழுத கண்ணீர்!’

★

வ. வேணுகோபாலன்

‘**கா**ரியம் இவ்வளவு விரைவில் மிஞ்சிப் போய்விடும், என்று நான் கருதவில்லை. இந்திர விழாவிற்குமுன்பு, இவை போன்ற சம்பவங்கள் நிகழும் என்பதை நான் கற்பனைகூட செய்யவில்லை. ஆனால், இனிமேல் என்ன என்ன நடக்கப் போகிறது என்பதை எளிதில் கற்பனை செய்துவிடுவேன்; ஏன்? இதுவரையில் நான் எண்ணியபடியே எல்லாம் நிகழவில்லையா? ஒரு வேளை, என்னை அறியாமல் எனக்குள்ளே ஒரு தெய்வம் இருந்து எல்லாவற்றையும் தெரிவிக்கின்றதுபோலும்! ஸத்துகன் இங்கு வந்துபோகத் தொடங்கிய நாள் முதல் இன்றுவரையில் எதிர்பாராத பல சம்பவங்கள் நடந்துவிட்டன. ஆனால் பாவம், காதல் மயக்கம் கொண்ட ஸத்துகனும் பத்திரையும் என்ன செய்வார்கள்?

காதல் ஏற்படுவது இயல்புதான்; எனக்கு ஏற்படவில்லையா? ஆனால் இவ்வளவு விரைவில், எதிர்பாராமலேயே தோன்றிக்கொண்டிருக்கும் இவ்விபரீதங்கள், அபசகுனங்கள், தீக்கனவுகள், பழி வாங்கும் வஞ்சகம்—இவ்வளவுதாமா? இன்னும் நடக்கப் போவன என்னவோ? ஆனால் இத்தகைய சம்பவங்களில் எனக்கும் பங்கு இருந்தால் நான் என்ன செய்வேன்? தவிர இவ்வளவு விபரீதங்களை என் கண் கொண்டு பார்க்க என்னால் இயலாது. எனக்கென்ன? பௌத்த சங்கத்தில் உபதேசம் கேட்கும் நான், ஒரு பிக்ஷுணி அல்லவா? அந்தப் பிக்ஷுணிகளைவிட நான், எந்தவிதத்தில் குறைந்தவள்? பிக்ஷுணிகளின் கூட்டத்தில் நானும் ஒருத்தியாக நடிக்கப் போகிறேன். அப்போது பத்திரையின் காதல் நாடகத்தைக் கண்டு களிக்கலாம்; ஆனால், என்னைக் கண்டு நகைப்பவர் யார்?

காரணம் என்ன?

ஓர் அதிசயம்! அந்தப் பிக்ஷுணிகள் என்னிடம் அவ்வளவு அன்புடன் இருப்பதற்குக் காரணம் என்ன?—நான், ஸத்துக சிரேஷ்டியின் காதலிக்குத் தோழி என்னும் கௌரவத்திற்கா? அல்லது என் அழகுக்கா? பிக்ஷுணிக் கோலம் பூண்டதற்கா?—எப்படியிருந்தால் என்ன? பிக்ஷுணிகைகள் என்றால் இந்நகரில் அதிகம் மதிப்பு இருக்கிறது. ஆனால், ஒன்று; நான் அந்த சங்கத்திற்குள் புகுந்ததும் என் கண்கள் கள்ளத்தனமாக ஒரு வடிவத்தைப் பார்த்து உள்ளத்திற்குக், கலக்கத்தை உண்டு பண்ணுகின்றன. அது ஏன்? என் கண்களின் குற்றமா அது? அல்ல! அந்தக் கள்ள விழியுடையான், தன் பார்வை கொண்டு என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டான்.

ஆனால் அவன் ஒரு பிக்ஷுவே! ஒரு பிக்ஷுணியிடம் நாணமின்றி அந்தப் பிக்ஷுவைப் பற்றிக் கேட்டேன். ‘பாலக பிக்ஷு!’ என்றாள் அவள். ‘பாலகபிக்ஷு!’ நல்ல பொருத்தமான பெயர். அவர் முகத்தில் என்ன வசீகரம்! பத்திரையைப்பற்றி முதலில் நான் பரிகசித்தேனே! இப்போது என்னைப் பரிகசிப்பது யார்? என்னை நானே பரிகசித்துக் கொள்கிறேன். கைம்பெண்ணாகிய நான் இவ்வாறு காதல் கொண்டு கலங்கலாமா? ஏன்? எனக்குக் கலியாணம் ஆன விஷயம் எனக்கே தெரியாது. என் கணவர் எவ்வாறு இருந்தார்? கணவர் என்ன? என் அறியாப் பருவத்தில் என் தாய் தந்தையர் எனக்குப் பொம்மைக் கலியாணம் செய்வித்தால் அதற்கு நான் என்ன செய்வேன்? கலியாணம் நடந்ததாம் —கணவர் இறந்துவிட்டாராம் —கைம்பெண் ஆகிவிட்டேன் நான்—என் அறியாப் பருவத்திலேயே இவ்வளவு நாடகமும். ஏதோ. என் தலைவிதி தாய் தந்தையரை இழந்து, இந்தப் பத்திரைக்கு உயிர்த் தோழியாக வந்து சேர்ந்தேன்! பாலக பிக்ஷுவின் சந்திப்பு ஏற்பட்டிருக்கையில் என் தலைவிதியைப் பற்றி இகழ்வதா? முற்றிலும் விதியைப் போற்றுவேன் யான்!

காதலிப்பதால் வருத்தமேற்படுமா ?

ஸத்துக சிரேஷ்டிக்கு மதிமந்திரியாக விளங்கும் அவர் எங்கே போய்விடுவார்? நான் அவரைக் காதலிப்பதால். பத்திரைக்கு வருத்தம் உண்டாகுமா? சந்தோஷம் உண்டாகுமா? சீ—என் அறிவு மிகவும் மழுங்கிவிட்டதே! இனி மனத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். பத்திரைக்கு இது தெரிந்தால் என்ன நேரிடும் தெரியுமா?

அந்தப் புத்தமித்திர அடிகள் இருக்கிறாரே!—அவர்—‘சர்வம் துக்கம்!’ ‘சர்வம் நாசம்’ ‘சர்வம் க்ஷணிகம்’ ‘மோக்ஷம். சர்வசூன்யம்’—என்று இவ்வாறு ஒவ்வொன்றாக நாள்தவறாமல் உபதேசம் செய்துகொண்டிருக்கிறார். ஆழ்ந்து யோசனை செய்தால் சில விஷயங்கள் உண்மையென்றே புலப்படுகிறது. எல்லோரும் மெய்மறந்து கேட்கிறார்கள். ஏன்? நான் கூட மெய்மறந்து கேட்டேன். எல்லாம் அநுபவத்திற்கு வருமாயின்—பூமி மோக்ஷலோகமாகிவிடாதா? மோக்ஷத்தைக்கூட சூன்யம் என்றல்லவா சொல்கிறார்? அது கிடக்கட்டும். நாம் செய்யும் பாபங்கள்கூட க்ஷணிகத்தில் நாசமுறும் என்று க்ஷணிக பக்ஷம் கூறுகிறாரே! சர்வம் க்ஷணத்தில் நாசம் என்றால் எல்லோரும் நாள்தோறும் நாசமாகிக்கொண்டே இருக்கிறார்களா? ஏன்?—வாழ்க்கை முழுவதும் நாளுக்கு நாள், க்ஷணிகத்துக்கு க்ஷணிகம் நாசமடைந்து கொண்டுதானே வருகிறது! தற்போதுள்ள நிலையில் சர்வம் நாசம் என்பது எனக்கு நன்றாகப் புலப்படுகிறது’ என்று இவ்வாறு எண்ணிய வண்ணம் கன்னிமாடத்தின் ஒருபுறத்தில் உட்கார்ந்திருந்தாள் வசந்தி.

பத்திரையும், வசந்தியும் பிக்ஷுவைக் கண்டு அன்புடன் வணங்கினர். “சுகதன் உங்களுக்கு அருள் செய்வான்......” என்றார் பிக்ஷு.

வசந்தியின் கலக்கம்

வசந்தியின் மனது சில நாட்களில் பலவாறு கலங்கிவிட்டது. அவள் கைம்பெண்ணாயினும் குற்றமற்றவள்; அறிவு மிக்கவள். மனத்தூய்மையுடனேயே இருந்தாள். எத்தனையோ இளைஞர்களை அவள் பார்த்திருக்கிறாள். எனினும் தன் மனத்தைச் சிறிதும் கலங்கவிடாள். மனத்தை எல்லை மீறிச் செல்லாதவாறு ஒரு வழிப்படுத்தி நேர்மையான முறையில் நடந்து வந்தாள். ஆனால் அவள் என்று பௌத்த சங்கத்திற்குள் புகுந்தாளோ, அன்று முதல் பாலகபிக்ஷுவின் வசமானாள். பத்திரையை நல்வழிப்படுத்த வேண்டும், அவளுக்கு வரும் துன்பங்களை முன்னர் அறிந்து அகற்றவேண்டும் என்று எண்ணி பத்திரையுடன் பல சமயத்திலும் வாதம் புரிந்த வசந்தி, பாலகபிக்ஷுவின் பார்வையில், மயங்கித் தானும் தீ நெறியில் செல்லத் தலைப்பட்டாள்! பத்திரைக்குப் பலவாறு உபதேசம் புரிந்தாள். அவளை விட மோசமான நிலையில் இறங்குவதை அவள் உணராமல் இல்லை. உணர்ந்தும் என்? ‘காதலைவிட இன்பம் தருவது உலகத்துள் வேறு இல்லை. ஆனால் அது அறிவை விழுங்கி விடுகிறது. உலகத்தில் இது இயல்புதான். பிறருக்கு எளிதில் உபதேசம் செய்யலாம். ஆனால் அவ்வுபதேசப்படி நடப்பதென்பது இயலாது’ என்று தனக்குள் கூறிக்கொண்டாள். தன் நெஞ்சத்திற்குத் தானே சமாதானம் புகன்றாள்.

காதலை விடச் சிறந்ததில்லை

வேதாந்தத்தை எடுத்துப் பேசி விவாதம் புரியலாம். ஆனால் அநுபவத்திற்கு அவற்றை ஒரளவேனும் கொணர்ந்தவர் உண்டா? அநுபவத்திற்குக் கொணர இயலாதவையும், மனத்தால் மட்டும் கற்பனை செய்யக்கூடியவையும் ஆகிய விஷயங்களையே மதிக்கத்தக்க நூல்களில் கூறியிருக்கிறார்கள். கற்பு, காதல் என்பவற்றைப் பற்றி பிரமாதமாக எழுதிவிடலாம். அவற்றின் உண்மைகளை அநுபவத்துக்குக் கொணர்ந்தவர் எவ்வளவு பேர்? காதலைக் காட்டிலும் பெரிய பொருள் இல்லை என்றே வசந்தி எண்ணிவிட்டாள்.

அவள் மனத்தில் மற்றொரு விஷயம் ஞாபகம் வந்தது:—‘பத்திரையிடம் ஸத்துகன் நாள்தோறும் வந்து செல்வதை மும்முடிநாய்கர் உணராமல் இல்லை, அவ்வளவு நன்றாகவும் உணரவில்லை. ஆனாலும் பத்திரையின் வேறுபாட்டை அவர் உணர்ந்து கொண்டார். ஸத்துகனிடம் அவர் மிகவும் மதிப்பு வைத்திருக்கிறார். ஆனால் அதற்குச் சமமாக சந்தேகமும் அச்சமும் கொள்கிறார். இல்லாவிடில் அன்றைய தினம் என்னை அழைத்து ‘அவனைப்பற்றிக் கேட்பானேன்? பத்திரைக்குத் தான் புத்தி கூறுவானேன்? அல்லாமல் நானும் பத்திரையும் ஸத்துக மந்திரம் போய் வருவது அவருக்குத் தெரிந்திருந்தும், ஸத்துகனைப்பற்றி மிகவும் அளந்து வார்த்தைகளைச்சொன்னாரே! அவரும் என்னைப்போல் ஸம்சயவாதி போலும்! ஸத்துகனுக்கும் பத்திரைக்கும் உள்ள காதலை அவர் நன்கு அறிவார். இல்லையேல் இன்னும் சில நாட்களில் அறிந்து கொள்வார். ஆனால், பாவம்! எழுந்திருக்கக் கூட வன்மை இல்லை. வயதும் ஆகி விட்டது. இந்த முதுமைப் பருவத்தில் பெண்ணின் நிமித்தமாக வருத்தமில்லாமல் அவர் மோக்ஷிக்க வேண்டுமே! யோசனை இல்லாமல், தடை இல்லாமல், தடை சொல்லாமல் ஸத்துகனுக்கும் பத்திரைக்கும் மணம் செய்து விட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்? யாரை விட்டது விதி? உற்பாதத்திற்கு முன்தோன்றுகின்ற இவ்வறிகுறிகள் யாரை, எவ்விதம் கொண்டு விடுகிறதோ? எதைப்பற்றியும் எனக்குக் கவலை இல்லை. என் மனக்கோட்டை எவ்வாறாகும்? என்பதுதான் எனக்கு கவலை இல்லை—இவ்வாறு, வசந்தியின் மனம், காற்றால் கலங்கி ஓடும் மேகம் போல் கவலையால் கலங்கியது. பலவாறு சுழன்றது. அப்போது, “வசந்தி” என்று அழைத்துக் கொண்டே பத்திரை, மாடத்திலிருந்து கீழிறங்கினாள். அப்போது தான் மனம் ஒரு வழி நிலைத்தது வசந்திக்கு. பத்திரை முகவாட்டத்துடன் வந்து வசந்தியின் அருகில் உட்கார்ந்தாள்.

“பத்திரை என்ன செய்தாய் இவ்வளவு நாழிகை?”

“வசந்தி; மனக்கலக்கம் நீங்குவதற்காக, புத்ததேவரது வடிவத்தின் முன் அமர்ந்து அமைதியாக இருந்தேன்; பொறுமைக்கு இருப்பிடம் புத்ததேவரல்லவா?”

“அப்படி என்ன கலக்கம்? அந்த கனவிலிருந்து நீ கலங்கியிருக்கிறாய்! கனவை யாரேனும் நம்புவார்களா? அந்தக் கனவு நனவானாலும் நாம் என்ன செய்ய இயலும்?”

உள்ளம் உணரும் வன்மை இல்லை

“கடைசியில் நானும் அந்த முடிவுக்குத்தான் வந்திருக்கிறேன். ஆனால், அன்றொருநாள் நாம் சிவிகையில் வரும்போது ‘அவரை நம்பவேண்டாம்’ என்று ஒருவன் கூறியதும், உற்பாதமாக விளக்கு அணைந்ததும் முத்து வியாபாரியின் பழி வாங்கும் வஞ்சகமும், யான் கண்ட கொலைக் கனவும் என்னை மிகவும் கலக்கமுறச் செய்கின்றன. நான் ஏதோ தவறான வழியில் செல்வதாக என் மனம் சஞ்சலமடைகிறது. எது தவறு? என்பது மட்டும் விளங்கவில்லை. அல்லாமல் தந்தை வேறு. அடிக்கடி புத்தி புகட்டுவது போல் ஏதேதோ சொல்கிறார்: ‘நான் பிறந்தவுடன் என் ஜாதகத்தைப் பார்த்தார்களாம்; கெடுதல் ஏதோ இருப்பதாகச் சொன்னார்களாம். கலியாணம் ஆகும் வரையில் எந்த ஆண்மகனோடும் வார்த்தையாடலாகாது என்றும் சொன்னார்களாம் சோதிடர். அதனால் நான் ஸத்துகரோடு வார்த்தையாடுதல் தவறு என்பது என் தந்தையின் எண்ணம்; வெளிப்படையாகக் கூறுவதற்கு அஞ்சுகிறார்! முதிர்ந்த அறிவும் வயது முண்டய என் தந்தைக்கு என் உள்ளத்தை உணரும் வன்மை இல்லை. ஸத்துகரைக் காணும்போது மிகுந்த மதிப்புடன் நடந்து கொள்கிறார். ‘நீ, குழந்தை. உலக விவரம் உனக்குத் தெரியாது. நம்குல வழக்கம் மணமரபு முதலியவற்றை நீ அறியாய்’ என்கிறார் சில சமயம்”

“ஆடவர்களுக்குத் தன்னலமே எப்போதும் நோக்கம். பெண்களின் நிலையைப்பற்றி அவர்கள் சிறிதும் எண்ணுவதில்லை. அடங்கி வாழ்வதே பெண்களுக்கு மேன்மையைத் தரும் என்பர்; ஆனால் அதற்கும் எல்லை உண்டல்லவா? பெண்கள் தாமாக ஓர் இளைஞனை மணம் புரிந்து கொள்வதில் என்ன தவறு?”

“நான் அதைப்பற்றிப் பேசத் தொடங்கியபோது அவர் அதற்கு என்ன கோபம் கொண்டார் தெரியுமா? ‘அதனால் பலதீமைகள் விளையும். அதை நீ உணராமல் பேசுகிறாய்? என்றார். உடனே நான் திரும்பி விட்டேன்”

“ஸத்துகரைப் பற்றி அவர் நோக்கம் என்னவோ?”

“அவர் நோக்கம் எதுவாயிருந்தாலும் எனக்கு லக்ஷியம் இல்லை; போதிநாதன் அருள் செய்வான்”

“பத்திரை, நாழிகை ஆகிவிட்டதே! இன்றைக்காவது இந்திரவிகாரம் போய் வருவோம்; போதி விருக்ஷத்தை வலம் வந்தால் மனத்துயர் போகும்”

“ஆம்; இந்திரவிகாரம் போய்விட்டு வரும்போது பௌத்த சங்கத்திற்கும் போய் வரலாம். அவர் காத்திருப்பார்” என்று கூறிவிட்டு புறப்பட்டாள்.

முத்துச்சிவிகையில் ஏறிக்கொண்டு இருவரும். இந்திரவிகாரத்திற்குச் சென்றனர்.

இந்திர விகாரத்தில்

புத்த தேவனுக்கென்று இந்திரனால் நிறுமிக்கப்பெற்ற கோயில் இந்திர விகாரம். அங்கே பௌத்த பிக்ஷுக்களும் பிக்ஷுணிகளும் எப்போதும் தரும வுரைகளைக் கேட்ட வண்ணம் இருப்பர். சிவிகை கோயிலை அடைந்தது. உடனே அதை வெளியில் நிறுத்திவிட்டு இருவரும் கோயிலுக்குள் சென்றனர். எங்கும் அமைதியாக விளங்கும் அக்கோயிலைக் கண்டவுடன் பத்திரை, வசந்தி- இருவரது உள்ளத்திலும் அமைதி நிலவியது. தூய்மையால் பொலிவு பெற்று விளங்கும் அக்கோயிலில் புகுந்தவுடன் இவர்கள் மனமும் தூய்மை எய்தியது. புத்தாலயத்தின் வனப்பைக் கண்டவண்ணம், உள்ளே சென்று புத்ததேவரை வணங்கினர். கம்பீரம் நிறைந்த வடிவத்துடன் சுகாசனத்தில் அமர்ந்திருக்கும் புத்ததேவரது பிரதிமை பார்க்கப் பார்க்க வியப்பையும் பக்தியையும் அளித்தன. சாந்தம் நிறைந்த அவரது மதி வதனமும், கருணை பொழியும் கண்மலரும், மனங் குளிர்விக்கும் புன்னகையும், தன்னை நோக்கி நிற்கும் தியான நிலையும் உள்ளத்தில் ஒருவித சக்தியை உண்டாக்கின. பரந்த முகம், கூறிய மூக்கு, நீண்டு தொங்கிய காதுகள், ஆஜானபாகுவான தோற்றம்-இவர் மஹா புருஷர் என்பதை யாவரும் அறியச் செய்தன. உள்ளம் நிறை சாந்தமுடன் புத்தனை வணங்கி வலம் வந்தனர் இருவரும்.

போதி விருக்ஷமே அருள் செய் !

சித்திரத்தில் எழுதிய தெய்வ வடிவங்களோ! கல்லில் செதுக்கிய பிரதிமைகளோ! என்று கூறும்படி ஆங்காங்கே சுற்றிலும் பிக்ஷுக்கள் ஒருபுறம் பிக்ஷுணிகள் ஒருபுறமும் அமர்ந்து தியானம் செய்திருந்தனர். மலர் விழி திறவாத அவர் தம் வதனங்களையின்றி. மேனி முழுவதும் மறையச் சீவரத்தால் போர்த்து விளங்கினர். அவரது தியான நிலையைக் கண்டு, தூய்மை நிறைந்த வனத்துடன் போதி விருக்ஷத்தைத் தொழுது வலம் வந்தனர் இருவரும். ‘புத்தனுக்கு ஞானோதயம் அளிக்கச் செய்த போதி விருக்ஷமே! என் மனத்துயர் அகற்றி இன்பம் தரச் செய்வாய்! ஸத்துகரது வாழ்க்கைத் துணைவியாய் யான் விளங்கும்படிக் கருணை புரிவாய்; புண்ணிய மனத்தினர் புகழ்ந்து வலம் வரும் போதி விருக்ஷமே! அருள் புரிந்து அடியேற்கு அகம் நிறை இன்பம் அளிப்பாய்’ என்று தன் மனத்துக்குள் வேண்டிய வண்ணம் வலம் வந்தாள் பத்திரை. அப்போது, வயதுமுதிர்ந்த பௌத்த பிக்ஷு ஒருவர் அவ்விடம் வந்துகொண்டிருந்தார். அவர் கைகளில் கமண்டலுவும், மணி மாலையும் இருந்தன. மந்திரங்களை ஜபித்துக்கொண்டே போதி விருக்ஷத்தை வணங்கிவிட்டு அதன் கீழ் அமர்ந்தார். பத்திரையும் வசந்தியும் அந்தப் பிக்ஷுவைக் கண்டு அன்புடன் வணங்கினர். பௌத்த பிக்ஷு புன்னகையோடு கைகவித்து ஆசி கூறினார். “சுகதன் உங்களுக்கு அருள் செய்வான்; ‘புத்தம் சரணம் கச்சாமி, தர்மம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி, என்னும் மும்மணிகளை நினைந்து வணங்கியிருங்கள்” என்றார். உடனே பத்திரையின் வதனத்தைக் கூர்ந்து பார்த்து வியப்புடன், குழந்தாய், உனக்குப் போதிநாதன் அருள் நிரம்ப உண்டு. உனக்கு அறிவு புகட்டும் ஆசாரியன் விரைவில் கிடைப்பான். ஆனால் அதற்குள் உன் மனத்தைப் பலவாறு இயங்க விடாதே” என்றார்.

(14-ம் பக்கம்)

திட்டமான வாழ்க்கை

வ. ரா.

தொன்னைக்கு நெய் ஆதாரமா அல்லது நெய்க்கு தொன்னை ஆதாரமா என்பதைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு, தர்க்க சாஸ்திரி ஒருவர், தொன்னையை கவிழ்த்துப் பார்த்தபொழுது, நெய் முழுதும் கீழே கொட்டிப் போயிற்று. நம்மவர்களுடைய தர்ம சாஸ்திரத்தைப்பற்றி நினைக்கும் பொழுதெல்லாம் மேற்சொன்ன தர்க்கசாஸ்திரியின் நினைவுதான் எனக்கு உண்டாகும்.

குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் என்ன செய்யவேண்டியது என்பது எல்லாருக்கும் திட்டமாகத் தெரிந்திருக்கவேண்டும். அதைத் தெரிந்துகொள்ளாமல் போனால், காரியம் எதையும் செய்ய முடியாது. தர்க்க சாஸ்திரியின் பரிதாபகரமான நிலைமையில்தான், எல்லாரும் இருக்கவேண்டிவரும். மேலும் தர்ம சங்கட நிலைமை என்று ஒன்று உண்டு. அதைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கையில், நண்பரும் வந்து சேர்ந்தார்.

நண்பர்:—எதைப்பற்றியோ, யோசித்துக்கொண்டிருக்கிறாய் போல, தோன்றுகிறதே!

நான்:—ஆமாம்! யோசித்துக்கொண்டிருக்கிறேன்.

நண்பர்:—எதைப்பற்றியோ?

நான்:—தர்ம சங்கட நிலைமை என்று ஒன்று உண்டு. தெரியுமா?

நண்பர்:— சொல்லுங்கள்.

நான்:—அரசன், பருந்து, புறா-இந்தக்கதை உமக்குத் தெரியுமா?

நண்பர்:—புறாவை பருந்து தூக்கிக்கொண்டு போகையில் அரசன் பார்த்தான். பார்த்த பின் என்ன செய்கிறது என்று அவனுக்குத் தெரியாமல், சிறிது நேரம் விழித்துவிட்டு, தன் தொடையிலிருந்து சதையை அறுத்து பருந்துக்கு போட்டு விட்டு, புறாவை விடுவித்தானே, அந்தக் கதைதானே?

நான்:—அதே கதைதான்! அரசன் விழித்துக்கொண்டிருந்த நேரம், அவன் தர்ம சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டு தவித்தான். பருந்துக்கு ஆகாரம் வேண்டும். புறாவும் இறக்கக்கூடாது. இதற்கு என்ன செய்கிறது? அரசன் தன் சதையைக் கொடுத்து, தர்ம சங்கட நிலைமையினின்றும் தப்பித்துக்கொண்டான்.

நண்பர்:—அரசன் செய்தது மாதிரி எல்லாரும் செய்வார்களா? அல்லது அவர்களுக்கு செய்யத் தோன்றுமா?

நான்:—அதைத்தான், நான் உம்மை கேட்கிறேன்; அரசனுடைய மனோ பக்குவம் பெறாதவர்கள், சும்மா இருக்கலாமா?

நண்பர்:—கூடாது.

முடிந்ததை செய்ய வேண்டும்

நான்:—அரசன் சற்று நேரம் தவித்துத் திண்டாடினதுமாதிரி, ஹிந்து சமாஜம் நீண்டகாலமாக தவித்துத் திண்டாடி, செயல் ஊக்கத்தையும் செயல் ஆக்கத்தையும் இழந்து நிற்கின்றது.

நண்பர்:—ஏழைக் குடித்தனத்துக்கு, ராஜ வைத்யம் கட்டிவராது என்று சொல்லுகிறீர்கள்.

நான்:—தனது சக்திக்கும் திராணிக்கும் மீறிய தர்ம சாஸ்திரத்தை பாராட்டுவதால், லாபமே இல்லை. பாராட்டினால், ஒன்று வஞ்சகனாக காலம் தள்ளவேண்டும் அல்லது செயல் வல்லமை இழந்த சோம்பேறியாகத் திரியவேண்டும்.

நண்பர்:—எப்படி?

நான்:—அரசன் செய்தது மாதிரி செய்ய முடியாதவர்கள், அவன் கைக்கொண்ட தர்ம சாஸ்திர வழியைப் பற்றி கனவிலும் நினைக்கக் கூடாது. நினைத்து நினைத்து, ஒன்றும் செய்ய அவனால் இயலாமல் போனால், அவன், மனிதன் என்பது மாறிப் போய், மரக்கட்டையாக ஆகி விடுகிறான்.

நண்பர்:—ஆகவே, முடிவாக என்ன செய்யவேண்டும் என்று சொல்லுகிறீர்கள்?

நான்:—ஒன்று, பருந்துக்கு புறா இயற்கையான ஆகாரம் என்று சும்மா இருந்துவிட வேண்டும் அல்லது சாது புறாவை, அழகான புறாவை, கொடிய அவலக்ஷணமான பருந்து சாப்பிடவாவது என்று கோபம் மூண்டு, பருந்தை சுட்டு வீழ்த்திவிட வேண்டும்.

நண்பர்:—இந்த இரண்டில் ஒன்றைச் செய்யாவிடில்?

நான்:—மனிதன், தனது இயற்கையான தன்மையை இழந்து, மரக்கட்டையாக, அல்லது பகுத்தறிவு இல்லாத மிருகமாக மாறிவிடுவான்.



'மதன்காமராஜன்,' 'அனந்தசயனம்,' 'குமாஸ்தாவின் பெண்,' 'பிரஹலாதா'— படங்களில் புகழ்பெற நடித்த தென்னாட்டுத் தலைசிறந்த நடிகை எம். வி. ராஜம்மா சொல்லுகிறார்:

"நான் எப்பொழுதும் அருந்துவது நரஸஸ் காபிதான். நரஸஸ் காபியின் தனிப்பட்ட நறுமணத்திற்காகத்தான் நான் அதை விரும்புகிறேன்."

M.V. Rajamma.

புகழ்பெற்ற சினிமா நக்ஷத்திரங்கள் விரும்புவது

நரஸஸ் காபி

M.N. K—17 TM.

நண்பர்:—குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில், ஏதாவது ஒரு காரியம் செய்துதான் ஆகவேண்டும் என்றும் பெரிய தத்துவமும் தர்ம சாஸ்திரமும் பேசிவிட்டு, சோம்பிக் கிடக்கலாகாது என்றும் நீங்கள் சொல்லுகிறீர்கள்.

நான்:—ஆமாம். பருந்துக்கும் ஆகாரம் வேண்டும், புறாவும் இறக்கக் கூடாது என்று வீண் வாதம் செய்து கொண்டிருப்பதால், புண்ணியமே இல்லை. மனக் குழப்பத்தால் காரியம் செய்ய நேர்ந்தால், பருந்தும் புறாவும் சேர்ந்து சாகும்படியான வேலையைத்தான், அநேகமாக மனிதர்கள் செய்து விடுவார்கள்.

எளிய வழிகள் தேவை

நண்பர்:—காரியம் செய்து கொண்டே, மனிதன் சிறிது சிறிதாக தானும் முன்னேறி, தனது சமாஜத்தையும் முன்னுக்குக் கொண்டு வர வேண்டும் என்கிறீர்கள்.

நான்:—ஆமாம்! ஒரு முழுக்கில், மண் எடுப்பது எப்பொழுதும் சாத்தியமல்ல. ஒரு முழுக்கில் மண் எடுக்க வேண்டும், இல்லாவிட்டால் சும்மாயிருந்தாலும் பாதகமில்லை என்று சொல்லுவது அசட்டுக் கக்ஷியாகும். மேலும்—

நண்பர்:—மேலும் என்று ஆரம்பிக்கும் பொழுதே, பயமாயிருக்கிறதே!

நான்:—பயப்படக்கூடியதை நான் சொல்லப் போவதில்லை. நான் சொல்லப் போவது மிகவும் துக்ககரமான விஷயம்.

நண்பர்:—சொல்லுங்கள்.

நான்:—நம்முடைய தர்ம சாஸ்திரத்தையும் வாழ்க்கை நோக்கத்தையும் நமது எதிரிகளும் ஏற்றுக் கொண்டு போராடுவார்கள் என்று நம்புவது சுத்தத் தவறு. நமது தர்ம சாஸ்திர முறைப்படி, எதிரி போராடவில்லை என்று அவன் பேரில் பழி சுமத்தப் பார்ப்பது சிறு பிள்ளைத்தனமாகும்.

நண்பர்:—பொதுவாக, ஒரு தர்ம சாஸ்திரம் இல்லையா அல்லது இருக்க முடியாதா?

நான்:—பிரயாணிகள் செல்லும் கப்பல்களைக்கூட ஹிட்லரின் ஆட்கள் உடைத்துத் தள்ளுகிறார்களே என்று முறையிட்டுக் கொள்ளுவதில், என்ன பயன் கிடைக்கும்?

நண்பர்:—ஒன்றும் கிடைக்காது. அது மட்டுமல்ல. ஹிட்லரை வீழ்த்தத் தெரியாத மூடர்கள், வரட்டு தர்ம சாஸ்திரம் பேசுகிறார்கள் என்று உலகம் சிரிக்கும்.

நான்:-எதிரி, தங்கள் தர்ம சாஸ்திரத்தை ஒப்புக்கொள்ளுவான் என்று நினைத்து, பண்டைக்காலத்தில், ஹிந்துக்கள் ஏமாந்து போய், பெரிய நஷ்டத்தையும் அவமானத்தையும் அடைந்தார்கள்.

நண்பர்:-அது என்ன கதை?

சோமநாதபுரம்

நான்:-குஜராத் பிராந்தியத்தில், சோமநாதபுரம் என்ற பிரசித்தி பெற்ற புண்ணிய ஸ்தலம். அந்தஸ்தலத்தில் பிரம்மாண்டமான கோயில். அதைக் கொள்ளை அடிக்க கிஜினி மகம்மது என்பவர், அதன் பேரில் படை எடுத்து வந்தார்—

நண்பர்:-அந்தக் கதையா?

நான்:-கோயிலையும் ஊரையும் காக்க வேண்டிய பொறுப்பை கொண்ட ஹிந்துக்கள், கோயிலின் முன்புறத்தில் பசுமாட்டுக் கூட்டங்களை நிறுத்தி வைத்தார்கள் எந்த நோக்கங் கொண்டு? கிஜினி மகம்மது பசுமாடுகளைக் கொன்று கோயிலுக்குள் நுழையமாட்டார் என்ற அசட்டு நம்பிக்கையைக் கொண்டு, அவ்வாறு செய்தார்கள். முடிவு என்ன? மாடுகள். கோயில் எல்லாம் மகம்மதுக்கு கிடைத்தன.

நண்பர்:—பசுவைப்பற்றி ஹிந்துவுக்கு இருக்கும் பக்தியும் மரியாதையும் ஏனையோருக்கும் இருக்கும் அல்லது இருக்கவேண்டும் என்று சோமநாதபுரம் ஹிந்துக்கள் எண்ணினது சிறுபிள்ளைத்தனம் தான்.

நான்:—இப்படிச் செய்தால், ஹிந்துக்கள் சண்டை செய்ய தைரியம் இல்லாத கோழைகள் என்று பிறர் நினைக்க மாட்டார்களா? அவ்வாறு அவர்கள் ஏன் நினைக்கக் கூடாது என்று நான் உம்மைக் கேட்கிறேன்.

நண்பர்:-பனைமரத்தின் கீழ் உட்கார்ந்து பாலைக்குடித்தாலும் கள் குடித்தான் என்று தான் உலகம் சொல்லும். சோமநாதபுரம் ஹிந்துக்கள் கோழைகள் என்ற சந்தேகத்துக்கு இடம் கொடுத்த காரியத்தை, அவர்கள் செய்தது மிகத்தவறான வேலை தான்.

ஆராய்ச்சி அவசியம்

நான்:—ஒரு சமாஜம் கட்டுக் குலையாமல் இருக்க வேண்டுமானால், அது ஓய்ந்திருக்கவே கூடாது. தலைமுறை தலை முறையாக, புதிது புதிதாக ஏதாகிலும் ஒன்றைப்பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கவேண்டும்.

நண்பர்:—செய்யாவிட்டால்—?

நான்:—துர்நாற்றம் எடுக்கும் குட்டைப் பாசியைப் போல, அந்த சமாஜம் ஆகிவிடும்.

நண்பர்:—கடுமையாக இருக்கிறதே!

நான்:—நெருப்பு என்றால் வாய் வெந்து போய்விடுமா? கிரேக்கர்கள் முதல் எத்தனையோ நாட்டார் இந்தியாவின் பேரில் படை எடுத்துவந்ததன் காரணங்களை ஹிந்துக்கள், அவ்வப்போது, ஆராய்ந்து பார்த்து, தக்க, தேவையான மாறுதல்களை, தங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்திக் கொண்டிருக்க வேண்டாமா?

நண்பர்:—வேண்டியது தான்.

நான்:—அப்பொழுதெல்லாம் செய்யத் தவறி விட்டாலும், இப்பொழுதாவது ஆராய்ந்து பார்த்து தக்கன செய்து கொள்ள வேண்டாமா?

நண்பர்:—நீங்கள், ஏன் ஹிந்துக்களை மட்டும் பற்றி துண்டாகப் பேச வேண்டும்?

நான்:—உலகத்தில் மற்றும் எல்லோரும் மிக்க உஷாராக இருந்து, தங்கள் சமாஜங்களைக் காப்பாற்றிக் கொண்டு வருகிறார்கள். முப்பது கோடி ஹிந்துக்கள் தங்களை காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை, அவர்கள் தரித்திரர்களாக வாழ்கிறார்கள் என்று பிற நாடுகளில், இன்றைக்கு பிரசாரம் நடந்து வருகிறதே, அது உமக்குத் தெரியாதா?

நண்பர்:—நன்றாகத் தெரியும். அதற்காக, என்ன செய்ய வேண்டும்?

நான்:—இந்தத் தலைமுறை ஹிந்துக்களாவது ஆழ்ந்து யோசனை செய்ய வேண்டும். ஒரு முகமான முடிவுக்கு வர வேண்டும். அந்த முடிவினால், உலகம் முழுதும் க்ஷேமம் அடைய வேண்டும்.

நண்பர்:—வழியைச் சொல்லுங்கள்.

நான்:—நான் சொல்லவாவது? கலந்து யோசியுங்கள். பெரிய லக்ஷியத்தை மனதில் வைத்து பூஜை செய்து கொண்டு, காரியம் ஒன்றும் செய்யாமல் சோடையாகப் போகக்கூடாது. நம்மைப் போலவே, எதிரியும் நடந்து கொள்ளுவான் என்ற அசட்டு ஆசையை உதறித் தள்ளிவிடவேண்டும். எல்லாருக்கும் புரியும்படியான தர்ம சங்கடமில்லாத முறைகளை கொண்டு, சமாஜத்தை உருவாக்க முயலவேண்டும். எறும்பு ஊர, கல்லும் தேயும் என்பது உமக்குத் தெரியாதா?

இனம் வைத்திய விந்தை

பூர்ண ஆரோக்கியம், இன்ப வாழ்க்கை, நல்ல சந்ததிக்கும் வழி.

மதன மஞ்ஜரி பார்மஸி, 184 சைனா பஜார், மதராஸ்.

இப்பொழுது உங்கள் தேவைக்கு வேண்டிய ரெக்ஸோனா கிடைப்பது கடினமாயிருந்தால் அதற்காக கவலைப்பட வேண்டாம். இந்த அற்புதமான, ஒளஷத சக்தி வாய்ந்த இதமளிக்கும் சோப்பிற்கு ஏற்பட்ட நெருக்கடி தாற்காலிகமானதே.

சரும ஆரோக்கியத்திற்கு ரெக்ஸோனா

RP. 81-111 TM

REXONA PROPRIETARY LIMITED

கன்னித் தெய்வம்

சிறு கதை

★

எம். எஸ். கமலா

நான் அன்று ஆபீஸிலிருந்து வந்து சிரமத்துடன் சாய்வு நாற்காலியில் சாய்ந்தேன். என் பிள்ளை 'ரமணி' ஓர் புஸ்தகத்தை வைத்து திருப்பிக்கொண்டு பொம்மைகளைப் பார்த்துக்கொண்டிருந்தான். கைக் குழந்தை 'சுந்தரி' ஒரு வயது. தத்தித்தத்தி நடந்தவாறு என் நாற்காலிக் காலை பிடிக்க வந்தாள். என் யோசனை எங்கோ இருந்தது. 'பத்மம்' காபியுடன் வந்து நிற்பதையும் கவனிக்கவில்லை. "என்ன செய்கிறது? உடம்பு ஏதாவது சரியாயில்லையா?" என்று அவள் கேட்டதும் அதிர்ச்சியுடன் எழுந்து அவளிடம் இருக்கும் காபியை வாங்கி வெகு ஸ்வாரசியமாய் உறிஞ்சி ருசி பார்த்துவிட்டு 'சுந்தரி'யை பார்த்தேன். அவள் கலீர் என்று சிரித்தாள். சுந்தரியின் சிரிப்பையும் குறு குறுத்த கண்களையும் கவனித்தவாறு மீண்டும் என்னவோ யோசனை செய்துகொண்டிருந்தேன் சுந்தரியின் சிரிப்பு என்னை எங்கோ இழுத்துச் சென்றது. "ஏதேனும் கடிதம் உண்டா?" என்றேன்.

"மறந்தே போனேன். அப்பாவிடமிருந்து வந்திருக்கிறது" என்று ஒரு குதி குதித்துக்கொண்டு ஓடிப் போய் ஒரு கவரைக் கொண்டுவந்து கொடுத்தாள். அவசர அவசரமாக்க் கடிதத்தைப் படித்தேன். படித்தானதும் 'பத்மா'வை நிமிர்ந்து பார்த்து "எப்பொழுது பிரயாணம்?' என்றேன்.

"இப்பொ என்ன பிரயாணத்திற்கு? வேண்டுமானால் அவர்கள் வந்து இங்கேயே இருக்கட்டுமே!" என்று சொல்லிக்கொண்டு உள்ளே சென்றாள். எனக்கு அவள் சொல்லில் இருக்கும் பொருள் விளங்கவில்லை. "ஏன்?" என்று கேட்டுக்கொண்டு அவள் பின் தொடர்ந்தேன். நாற்காலியின் காலை பிடித்துக்கொண்டிருந்த 'சுந்தரி' நான் எழுந்ததும் நாற்காலியின் கால் அசைந்து கொடுக்கவே கீழே விழுந்து வீறிட்டாள். வேலைக்கார 'கருப்பாயி' ஓடி வந்து "ஐயோ என் மவளே ஊந்துட்டையா?" என்று அவளை வாரி அணைத்துக்கொண்டு அப்புறம் சென்றாள். அதே சமயம் என் மனைவி "ஏனென்றால், அவளா இருக்கிறாள்?" நீங்கள் பல்லைக் கெஞ்சிக்கொண்டு படுத்தால் சமயத்திற்குளழுதி வரவழைக்க நம் துரதிருஷ்டம்தான் அவளும் கண்ணை மூடிக்கொண்டு போய் சேர்ந்தாளே!" என்றாள்.

நான் அப்படியே மறுபடியும் வந்து நாற்காலியில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டேன். 'சுந்தரியின் கலீர் என்ற சிரிப்பும், கருப்பாயியின் 'மவளே' என்னும் சொல்லும் என் மனைவியின் ."அவளா இருக்கிறாள்?" என்னும் சொற்களும், என் ஹிருதயத்தினுள் மூடி வைத்திருந்த பிரேமாலயத்தின் வாயிலைத் திறந்து அவ்விடமிருக்கும் "கன்னித் தெய்வ"த்தைக் காண்பித்தது.

என் விவாஹத்திற்குமுன் நான் 'ஜில்லா போர்டு ஆபீஸில்' தலைமை குமாஸ்தாவாயிருந்தேன். எனக்கென்று நெருங்கிய பந்துக்கள் யாரும் கிடையாது. எங்கோ தூர பந்துக்கள் சிலருண்டு. பிறந்ததும் தாய் தந்தையரை பறிகொடுத்தவனாதலால் எப்படியோ தத்தித்தத்தி தலை எடுத்து 'பி. ஏ' பாஸ் செய்து மேற்படி வேலையில் ரூபாய் அறுபது சம்பாதித்துக்கொண்டு என் ஜீவனத்தைச் சுகமாகச் செய்துகொண்டேன். அச்சமயம் எத்தனையோ பேர்கள் எனக்கு பெண்கொடுக்க வந்தார்கள். வந்தவர்களில் 'பத்மா'வின் தந்தையும் ஒருவர். அவருக்கு 'பத்மம்' ஒரே பெண். அவரிடம் சுமார் பத்தாயிரம் ரொக்கமும் இருபது வேலி நிலமும் ஓர் வீடும் உண்டு. அவர் பெண்ணுக்கு விவாஹம் செய்து மாப்பிள்ளையை வீட்டுடன் வைத்துக் கொள்ளும் அபிப்பிராயத்துடன் வந்து என்னை பார்த்தார். நான் அதை உண்மை என்று நம்பாமல் இது சஹஜமாய் வழக்கத்தில் வழங்கப்படும் சொல் என்று நம்பி பத்மத்தை மனதிற்கு பிடித்திருந்ததால் கல்யாணம் செய்துகொண்டேன்.

பத்மத்தின் தாய் தந்தையருக்கு நான் அவர்கள் வீட்டிலிருக்கவேண்டும் என்றாசை. எனக்கோ மாமியார் வீட்டிலிருக்க அறவே இஷ்டமில்லை. அதிலும் பணம் படைத்த மாமனார் வீட்டில் மாப்பிள்ளைகள் சரணாகதியாய் கிடந்தால் அவர்களுக்கு நடக்கும் மரியாதை எத்தகையதென்பது தெளிவு. மேலும் கஷ்டப்பட்டாயினும் கால்வயிற்றுக் கஞ்சி குடிப்பேனே யல்லாது மனைவியின் வீடு சேரமாட்டேன் என்று திடசங்கல்பம் செய்துகொண்டேன். என் மாமனார், மாமியார், இதற்கு முதலில் கோபித்துக் கொண்டாலும், பிறகு தூண்டில் போட்டு மீனை பிடிப்பதைப் போல் என்மனைவியை என்னிடம் அனுப்பி அவள் மூலமாய் என்னையும் அவர்கள் இருப்பிடம் சேர்த்துக்கொள்ள முயன்றார்கள்.

'பத்மம்' நான் இருக்குமிடம் வந்தாள். சற்று பசையுள்ளவர் வள் வீட்டு செல்லப்பெண்ணாதலால் என்னாலானமட்டில் நன்றாய் வைத்துக் கொண்டேன். சிறிய தனி வீடு பார்த்தேன். அதுவரை இருந்த அறையை காலிசெய்தேன். அந்த அறையை பெருக்கிக்கொண்டிருந்த 'கருப்பாயி'யை நான் மனைவியுடன் குடித்தனம் துவக்கப் போவதை சொல்லி வீட்டுடன் என் மனைவிக்கு துணையாயும், வீட்டு வேலைகளைச் செய்யவும் ஆரோக்கியமுள்ள ஓர் வேலைக்காரி வேண்டுமென்று சொன்னேன். அவள் பனிரெண்டு வயதுள்ள அவள் ஒரே பெண்ணான 'சுந்தரி'யை அழைத்து வந்து எங்கள் வீட்டில் விட்டு அவள் எல்லா வேலைகளையும் செய்வாளென்றும், அவளால் செய்யக்கூடாததை தான் செய்து கொடுப்பதாயும் சொன்னாள்.

சுந்தரி மாநிறம்; எடுப்பான மூக்கு; பெரிய கண்கள், எப்பொழுதும் சிரித்த முகம்; சுறுசுறுப்பாய் வேலைகள் செய்வாள். சுத்தமாய் இருப்பாள். ஏது சொன்னாலும் கலீர் என்று சிரிப்பாள். புதிய ஊரில் புதிய வாழ்க்கை நடத்த வந்த 'பத்மம்'த்திற்கு அவள் இன்றியமையாத தோழி; வீட்டு வேலை முழுதும் அவளே செய்வாள். மத்தியான வேளைகளில் பத்மத்துடன் விளையாடிக்கொண்டிருப்பாள். அவர்களிருவருக்குள் ஜாதி வேற்றுமை இல்லை. மொத்தத்தில் அவள் எங்கள் சிறிய குடும்பத்துடன் சேர்ந்தவள். இரவு ஒன்பது மணிக்கு 'கருப்பாயி, வந்து அவளை அழைத்துச் செல்வாள். காலை கதிரவனின் தரிசனத்திற்குமுன் 'சுந்தரியின் சுந்தரக் குரல் தான் எங்களை எழுப்பும்.

பத்மம் தன் பெற்றோரின் அபிலாஷையை என்னிடம் சொன்னாள். நான் அதற்கிசையவில்லை. அவளுக்கு என்னை விட்டு செல்ல இஷ்டமில்லாவிடினும், தாய் தந்தையரின் உபதேசத்தாலும் பிறந்த ஊரின் பற்றுதலாலும் அடிக்கொரு முறை பிறந்தகம் சென்று விடுவாள். சேர்ந்தாற் போல் இரண்டு மாதம் இருப்பதில்லை. நானும் அதைப்பொருட்படுத்துவதில்லை. சுந்தரி வேண்டியதை எல்லாம் செய்து வைத்து விடுவாள்.

சில மாதங்களில் எங்கள் புதிய வாழ்க்கையில் மற்றொரு சிறு ஜீவன் எங்களுக்கு துணையாய் ஜனித்தது. அவன்தான் 'ரமணி'. அவனுடன் பத்மம் என்னிடம் வந்ததும் சுந்தரிக்கு வேலை அதிகமாயிற்று. ஆட்டமும் ஆனந்தமும் அதிகமாயிற்று. அச்சிறிய குழந்தைக்குச் சரியாய் அவள் கபடமற்ற சிரிப்பு என் வீட்டை நிரப்பும். ஒரு குழந்தையின் தாயாகியும் பத்மம் அவள் பெற்றோர்களின் விருப்பப்படியே நடந்துகொண்டிருந்தாள். நாள் பட சரியாய் போகும் என்று நினைத்த என் நினைவு கனவாயிற்றே தவிர, பத்மம் என்னுடனிருப்பது நாட்கள் கணக்கிலேயே தான் இருந்து வந்தது. இது எனக்குப் பெரிய வேதனையாயிற்று. இவ்வொரு விஷயத்தில் மாத்திரம் எங்கள் இருவருக்குள்ளிருந்த முரண்பாடு தீருவதாயில்லை.

ரமணி ஒன்றரை வயது குழந்தை. அவன் மழலைச்சொற்கள், நிஷ்களங்கமான சிரிப்பு. என்னைப் பரமானந்தத்தில் ஆழ்த்தியது. பத்மம் திடீரென்று அவனை எடுத்துக்கொண்டு தன் தந்தையுடன் பிறந்தகம் சென்றாள். என் வீடு சூனியமாயிருந்தது. சுந்தரியின் உற்சாகமும் குறைந்து விட்டது. அவள் சிரிப்பிற்கு ஜோடி இல்லை. இரட்டை நாகஸ்வரம் வாசித்துக்கொண்டிருந்தவர்கள் திடீரென்று எல்லா பக்கவாத்தியங்களையும் நிறுத்தி விட்டு ஒரு நாகஸ்வரத்தை வாசித்தால் எப்படி அதில் ஜீவனும் உணர்ச்சியும் இராதோ அப்படி இருந்தது. சுந்தரியின் சிரிப்பு. ஆனால் அவள் என் வேலைகளை எல்லாம் கடவுள் கைங்கரியம் செய்யும் பக்தனைப் போல் தவறாமல் சிரத்தையுடன் செய்துவந்தாள் வேதனையுற்ற என் உள்ளத்திற்கு அவள் முகம் சற்று சாந்தியையளிக்கும். அவள் சிச்ருஷை எனக்கானந்தமளிக்கும். அப்படி இருந்தும் நான் மனோவேதனையால் அவஸ்தைப்பட்டு படுத்தபடுக்கை ஆனேன். கருப்பாயி என் வீட்டிலேயே இரவு படுத்துக்கொண்டு காலை வேலைக்கு செல்வாள். இதை நான் பத்மத்திற்குத் தெரிவிக்கவில்லை.

ஒரு நாள் எனக்கு நினைவில்லாமல் போகவே சுந்தரி பயந்து என் மனைவிக்குக்கடிதம் எழுதினாள். அதுவரை அவளுக்கு படிப்பு வரும் என்று எங்கள் யாருக்கும் தெரியாது. அதை அறிய வேண்டிய அவசியமும் எங்களுக்கில்லை. பத்மம் தன் தந்தைக்கு கடிதம் எழுதும்போது தமிழில்தான் விலாசமிட்டு எழுதுவாள். அதைப் பார்த்திருந்தவளாதலால் அவள் பத்மத்திற்கு கடிதம் எழுதிவிட்டாள். அது வருமாறு:—

"அம்மா,

அய்யா ரொம்ப படுத்திருக்காறு. நினெவு நீச்சி இல்லே. எனக்கு ரொம்ப பயமா இருக்குது. நீங்க உடனே வந்தா மூச்சோடெ முகத்தெ பார்க்கலாம். நீங்க ரமணியெ எடுத்துண்டு வருவீங்கன்னு பாத்து பாத்து நீங்க வராததால் எங்க மனமெல்லாம் பொக்குன்னு போச்சு." "சுந்தரி"

இரண்டு நாட்களுக்குப்பின் டாக்டரின் மருந்தாலும். சுந்தரியின் சிரத்தையாலும் ஒரு மாதிரி இருந்தேன். அன்று என் மனைவி வருவாளென்று சுந்தரிக்குத் தெரியும். அவள் கடிதத்தைக் கண்டதும் அவள் நிற்க மாட்டாளென்ற நம்பிக்கை அந்தச் சிறுமிக்கு எப்படித் தெரியுமோ? பால் அதிகமாய் வாங்கிக் காய்ச்சி வைத்தாள். வீட்டு வேலை எல்லாம் முடித்து எனக்கு வேண்டியதைச் செய்துவிட்டு ஒரு பக்கம் எட்டி எட்டி பார்த்துக்கொண்டே இருந்தாள். நான் அதிகச் சோர்வுடன்மேல் மூச்சு விட்டபடி படுத்திருந்தேன். என் அருகில் வந்து நின்று வீசிக்கொண்டு நின்றிருந்தாள். காலை வேளையாயினும் என் மனோதாபம் அவ்வளவு உக்கிரமாய் இருந்தது.

தெருவில், கார் வந்து நின்ற சப்தம். நான் டாக்டரென்று

ஜனாதிபதி புதல்வர்களின் ராணுவ சேவை



ஜனாதிபதி ரூஸ்வெல்டின் 4 குமாரர்களும் அமெரிக்க ராணுவத்தில் சேர்ந்து அச்சு நாடுகளுக்கு எதிராக நடக்கும் யுத்தத்தில் சேவை செய்கின்றனர்.

நினைத்து அசிரத்தையாய் கண்களை மூடிக்கொண்டிருந்தேன். காலடி ஓசை இரண்டு மூன்று விதமாய் கேட்டது. நான் கண்களை திறக்கவில்லை. 'சுந்தரி' விசிரியை கீழே போட்டுவிட்டு 'கலீர்' என்று சிரித்தபடி "அப்பாவெ பார் கண்ணு!" என்று உற்சாக த்வனியுடன்கூவினாள். அதே சமயம் பத்மத்தின் மெல்லிய கரங்கள் என் நெற்றியை ஸ்பரிசித்தது. மெள்ள கண்களை திறந்தேன். கண்ணீர் வடிய என் முகத்தையே உற்று நோக்கியபடி நின்றிருந்தாள் பத்மம். சுந்தரி சாமான்களை எடுத்து வைக்க சென்று விட்டாள். என் மாமனாரும் மௌனமாய் என்முன் பிரமை பிடித்தவர்போல் நின்றிருந்தார்.

சில நாட்களுக்குப்பின் நான் சற்று குணமடைந்ததும் பத்மம் "எப்படி வந்தாள்? என்று கேட்டேன். அவள் பெட்டிக்குள் வைத்திருந்த 'சுந்தரி'யின் கடிதத்தைக் காண்பித்தாள். என் ஆச்சிரியத்திற்கோரளவில்லாமல் போயிற்று. 'சுந்தரி' சிறுமியாயும் வேலைக்காரியாயும் இருந்தாலும் என் மனதிற்குள் அவளுக்கு தலை வணங்கினேன். நான் நன்றாய் குணமடைந்தேன். இன்னும் விடியவில்லை. அதிகாலை என் வீட்டுக் கதவை யாரோ தட தட வென்றிடித்தார்கள். எழுந்து போய் கதவைத் திறந்தேன். 'கருப்பாயி' 'கலங்கிய கண்களுடன் நின்றிருந்தாள். விளக்கொளியில் அவள் முகம் பேயறைந்ததைப்போலிருந்தது. அவள் பட படப்புடன் "அய்யா! சுந்தரிக்கு உடம்பு என்னவோ தெரியலீங்க. உங்களெ கூட்டார சொல்லிச்சிங்க" என்று சொல்லி ஓட்டமெடுத்தாள். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. விளக்கை உள்ளே வைத்து விட்டு தெருக் கதவை வெளிப்புறம் தாளிட்டுக்கொண்டு அவள் பின்பு சென்றேன். அவள் சிறிய வீட்டிற்குள் கிழிந்த பாய்மேல், சுந்தரி படுத்திருந்தாள். புகை படிந்த விளக்கொன்று மங்கலாய் அவள் முகத்தருகிலிருந்தது. 'கருப்பாயி கண்ணை துடைத்துக்கொண்டே "அய்யா வந்திருக்காரு சுந்தரி!"



புரசவாக்கம் ஸர் எம். வி. டி. முத்தைய செட்டியார் ஹைஸ்கூல் 1943-ம் வருஷத்திய அதெலெடிக் பந்தய விளையாட்டுக் கோப்பையைப் பெற்ற ஸ்ரீ கே. மோஹன கிருஷ்ணன். இவர் பிரபாத் டாக்கீஸ் மானேஜர் ஸ்ரீ கண்ணபிரானின் புதல்வர்.

அப்பொழுதும் அவள் முகத்தில் அவளை அறியா சிரிப்பு அம்மங்கிய வெளிச்சத்தில் அவள் வாயைத் திறந்து மெள்ள "நான் போரேனுங்க. உங்களையும் என் கண்ணுவையும்விட்டு.......... எங்கே போனாலும் இருக்க மாட்டேனுங்க" என்று திணறித் திணறி சொல்லிக் கொண்டே கண்களை மூடினாள். நான் அவள் கைகளை தொட்டுப் பார்த்தேன். என் உள்ளத்துள் கதவு திறந்துக் கொண்டது. அவ்விடம் அவள் ரூபம் சென்றமர்ந்தது. அக்காரிருளில் வெளியே ஓடினேன். டாக்டரை அழைத்துவந்து பார்த்தேன். அவள் உடல் நீலநிறம் கொண்டிருந்தது. ஏதோ விஷஜந்து தீண்டப்பட்டதால் அவள் இறந்துவிட்டாளென்று டாக்டர் சொல்லிச் சென்றார்.

கருப்பாயியின் கதறல் கற்களை பிளந்துகொண்டு சென்றது. ஆனால் அது கடவுள் காதில் விழவில்லை. இப்பொழுது கருப்பாயி எங்கும் வேலை செய்வதில்லை. என் வீட்டில் குழந்தையைப் பார்த்துக்கொண்டு, நான் போடும் உணவை உண்டு, வாயிற் திண்ணையில் உறங்குகிறாள். 'பத்மம்' அவசியம் நேர்ந்தாலொழிய பிறந்தகம் செல்வதில்லை. அப்படிச் சென்றாலும் நாள் கணக்கில் திரும்பிவிடுவாள்.

'சுந்தரி' சென்ற ஒருவருடத்திற்கு பின் எனக்கு ஒரு 'சுந்தரி' பிறந்தாள். கருப்பாயி அவளை "மவளே"என்று கூப்பிடுவாள். சுந்தரியின் சிரிப்பும் சுறு சுறுப்பும் என் சுந்தரியிடமே அப்படியே பிரதிபலித்தது. அக் "கன்னித்தெய்வம்" சொல்லிசென்றபடியே என்னிடமே வந்துவிட்டாள். என் பத்மத்தை பிறந்த வீடு செல்ல சொன்னாலும்கூட "அவளா இருக்கிறாள்?" என்று சொல்லி கண்களில் நீர் சோர விடுவாள். இன்று அவள் பிறந்தகம்போக இச்சையிருந்தும் "அவளா இருக்கிறாள்?" என்றதையும், அதே சமயம் "என் மவளே! என்னும் கருப்பாயியின் அன்புச் சொல்லும் என் மனத்தின் கதவை தட்டி "கன்னித் தெய்வ"த்தைக் காட்டி எழுப்பிற்று.

கேஸரின்

அழகாகவும் அடர்த்தியாகவும் புஷ்டியாகவும் கூந்தலை வளர்க்கும்

விக்டோரியா டிபோ. மைலாப்பூர், மதராஸ்.

ஷாப்புகளில் கிடைக்கும்.

மூன்றுதாமரை மார்க்கு பீடி.

S.A.H

S.A.H ரிஜிஸ்டர் 2221.

Rgd. No. 2221.

25 வருஷமாய் தென்னாடு முழுதும் குணத்திலும் மணத்திலும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop:— S. அஹமத் உசேன் கோட்டை, சேலம். S.I.R.

ஆஸ்திரேலியாவின் விடுதலை

ஸ்ரீ கே. ஸ்ரீநிவாஸன்

ஆஸ்திரேலியா வெகு தொலைவிலிருக்கிறது. ஆசியாவிலிருந்தும் ஐரோப்பாவிலிருந்தும் பெரிய சமுத்திரம் அதைப் பிரித்துவைத்திருக்கிறது. அந்தக் கண்டங்களில் ஏற்படும் அதிர்ச்சிகளின் எதிரொலி அங்கு ஏற்படாதென்று பலரும் நினைத்திருந்த காலமுண்டு. கிரிமியன் யுத்தத்தின் ஓர் அங்கமாக ரஷ்யா பாய்ந்துவிடுமோவென்ற பயத்தினால் 1850-ம் வருஷத்திலே ஆஸ்திரேலியா பீரங்கிகளை ஏற்றியது உண்மையே. நியூகினிக்கு ஆஸ்திரேலியா கொண்டாடும் பாத்தியதை விஷயத்தை தீர்க்கும் வரையில் இதர விஷயங்களைக் கட்டிப்போட வேண்டியதுதானென்று 1919-ம் வருஷத்தில் சமாதான மகாநாட்டில் ஜனாதிபதி வில்ஸனிடம் மிஸ்டர் டப்ளியூ. எம். ஹியூஸ் வற்புறுத்தியதும் உண்மைதான். ஆனால் பொதுவாகச் சொல்லுமிடத்து 1941-ம் வருஷம் டிஸம்பர் மாதம்வரை படையெடுப்பு அபாயம் முன் நிற்பதாக ஆஸ்திரேலியா நினைக்கவேயில்லை. தனக்கென பிரத்தியேகமான அந்நிய நாட்டுக் கொள்கையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று அது கருதியதுமில்லை.

சமீபகாலமாக தேசப் பாதுகாப்பு, அந்நியநாட்டுக் கொள்கை இவற்றிலேயே ஆஸ்திரேலியா முக்கிய கவனம் செலுத்தி வருகிறது. ஹிட்லர் பயம் அந்த நாட்டுக்கு உண்டெனினும், பஸிபிக் நிலை மாறி வந்ததுதான் அதற்கு பிரதான காரணம். ஐரோப்பிய விவகாரங்களை ஆஸ்திரேலியா சிரத்தையுடன் கவனித்து வந்ததென்றாலும் அது மறைமுகமான சிரத்தைதான். பிரிட்டன் பார்த்துக்கொள்ளுமென்று அது நினைத்திருந்தது. பஸிபிக் விஷயம் அவ்விதமில்லை. அது ஆஸ்திரேலியாவை நேர்முகமாகப் பாதிக்கக்கூடியது. தூர கிழ்த்தேசங்கள் ஆஸ்திரேலியாவுக்குச் சமீப வடதேசங்களாகும். ஆகவே உஷார் என்ற கோஷம் ஆஸ்திரேலியாவெங்கும் ஆரம்பமாகிவிட்டது.

முந்தின யுத்தத்துக்குப்பிறகு பஸிபிக் நிலைமை இரு வழிகளில் மாறி விட்டது. ஜப்பான் முன்போல் பிரிட்டனின் நட்பு நாடாக இருந்து வரவில்லை. சிங்கப்பூர் தளம் ஏற்பட்டிருந்த போதிலும், அவசியம் நேர்ந்தால் துருப்புகளைக் கொண்டு வந்து குவிப்பதாகப் பிரிட்டன் ஆஸ்திரேலியாவுக்கு உறுதி கூறியிருந்தபோதிலும் ஐரோப்பா இருந்து வந்த நிலைமையில் பிரிட்டனின் பூரண உதவியை எப்போதும் போல் நம்பியிருக்க முடியாதென்பதை அத்தேசம் உணர்ந்துவிட்டது. அதனால் அந்நிய நாட்டுக்கொள்கை விஷயத்தில் புதிய வழியை அது பின்பற்ற வேண்டியதாகி விட்டது. டோக்கியோவுக்கும் வாஷிங்டனுக்கும் அது தன் பிரதிநிதிகளை நியமித்தனுப்பியதற்கும், சமஷ்டிப் பார்லிமெண்டில் அந்நிய நாட்டுக் கொள்கையை விவாதிக்க ஏற்பாடு செய்ததற்கும் இதுவே காரணமாகும்.

மியூனிச் கொள்கையை பிரிட்டன் கைவிட்டது ஆஸ்திரேலியாவுக்கு மிகுந்த திருப்தியை அளித்தது. ஆனால் விட்டுக்கொடுக்கக் கூடாதென்று ஆஸ்திரேலியாவிலிருந்து ஓங்கி அறைவது சுலபம்; பிரிட்டனுக்கு அது அவ்வளவு சுலபமான காரியமாக இருக்கவில்லை.

ஆஸ்டிரேலியாவின் முக்கிய அரசியல் கட்சிகளில் தொழில் கட்சியினருக்கு ஐரோப்பிய விவகாரங்கள் சம்பந்தப்பட்ட வரையில் அதிக சிரத்தை காட்டாமலிருந்தனர்; தங்களுடைய நாட்டை அந்நியர் படையெடுப்பிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்பதே அவர்களுக்கு முக்கியக் குறியாக இருந்தது. ஆனால் அந்தக் கட்சியிலிருந்த அதீத வாதிகள் கூட்டுப் பாதுகாப்பு முறையில் நம்பிக்கை வைத்திருந்தனர். இவ்விதம் தொழில் கட்சிக் குடும்பம் பிளவுபட்டுக் கிடந்ததால், அந்நிய நாட்டுக்கொள்கை விஷயத்தில் திட்டமான வழியை அக்கட்சியினர் பின்பற்ற முடியவில்லை; ஐரோப்பா சம்பந்தப்பட்ட வரையில் பிரிட்டனின் பாதுகாப்பு முக்கியமென்பதுதான் ஆஸ்திரேலியாவின் அபிப்பிராயம். அது பிரிட்டிஷ் கொள்கைக்கும் அனுகுணமாகவே இருந்தது. ஆனால் பஸிபிக்கில் நிலைமை வேறு. ஐரோப்பாவில் அச்சு நாடுகள் ஆக்கிரமிப்பதை ஆஸ்திரேலியக் கட்சித் தலைவர்கள் கடுமையாக ஆட்சேபித்த போதிலும், பஸிபிக்கில் அவ்வித ஆக்கிரமிப்பைக் கண்டிக்க அவர்கள் முன் வரவில்லை. ஜப்பானுடன் உறவாடி வர வேண்டுமென்ற ஆசை அங்கிருந்தது. ஆஸ்திரேலியப் பண்டங்களுக்கு ஜப்பான் நல்ல மார்க்கெட்டாக இருந்ததால், காலக்கிரமத்தில் அந்த மார்க்கெட்டையே அதிகமாக நம்ப வேண்டிவரலாமென்று அவர்கள் நினைத்தனர். இருந்தாலும் அவர்களுக்கு ஜப்பானிய ராணுவக் கொள்கையில் பீதி மட்டும் உண்டு; அரசியல் நட்பின் மூலம் அதைச் சமாளித்துக் கொள்ளலாமென அவர்கள் உத்தேசித்தனர். இந்தப் பூர்வோத்தரத்தை ஞாபகத்திலிருத்திக்கொண்டு யுத்தத்தில் ஆஸ்திரேலியாவின் பங்கை மதிப்பிடவேண்டும்.

யுத்தம் ஆரம்பமான காலத்தில் ஜெர்மன் சத்துரு மட்டுமே இருந்தபொழுது பிரிட்டனுக்குப் பூரண உதவியை அளிக்க ஆஸ்திரேலியா முன் வந்தது. அப்பொழுதும் ஆழந்தெரியாமல் காலையிட்டுக் கொண்டுவிட ஆஸ்திரேலியத் தலைவர்கள் விரும்பவில்லை. பஸிபிக் நிலைமை தெளிவுபடும்வரை துருப்புகளை ஐரோப்பாவுக்கு அதிகமாக அனுப்பி விடுவது ஆபத்தானது என்று அக்கால பிரதம மந்திரி மென்ஸிஸ் எச்சரிக்கை செய்தார். யுத்தமுறையில் சென்ற 25-வருஷங்களில் விசேஷ மாறுதல் ஏற்பட்டிருப்பதால் ஆஸ்திரேலியாவானது பெரிய சேனையை நம்பிக்கொண்டிராமல், 'சரக்கிற்கு' முக்கியதைக் கொடுக்கவேண்டுமென்று அவர் கூறினார். ஆள் பலத்தைக் காட்டிலும் இதர பலங்களை பிரிட்டனுக்குக் கொடுத்து உதவி செய்யலாமென்றும் அவர் தெரிவித்தார். ஆஸ்திரேலியாவின் உதவி பலன் தரத்தக்கதாக இருக்கவேண்டுமாயின், அது ஏகாதிபத்தியத்தின் ஓர் அங்கமாகவே தன்னைப் பாவித்துக்கொள்ளுவது அவசியமென்று அவர் வற்புறுத்தினார். இந்த வழியிலேயே ஆஸ்திரேலியாவானது யுத்த தளவாடங்களையும் உணவுப் பொருள்களையும், மூலப் பொருள்களையும் பிரிட்டனுக்கு உதவி வந்தது.

இருந்தாலும் அதன் திருஷ்டி முழுவதும் ஜப்பானிலும் அமெரிக்காவிலும் தான். பஸிபிக் விஷயத்தில் அமெரிக்கா அனுஷ்டிக்கும் கொள்கையில் அது மிகுந்த சிரத்தை காட்டி வந்தது. ஜப்பான் தெற்கு நோக்கி நகர்ந்தால் அமெரிக்க உதவி கிடைக்குமாவென்று தன்னைத் தானே அது கேட்டுக் கொண்டது. கிடைப்பதாக இருந்தால் டோக்கியோவிடத்தில் உறுதியைக் காட்டிக் கொள்ளவும் அது தயாராக இருந்தது. இந்த உறுதி மொழியை எதிர்பார்த்து ஜப்பானுக்கு ஆத்திரத்தை மூட்டக்கூடிய காரியத்தைச் செய்யாமலிருந்தது. இருந்தாலும் கூட்டுப் பாதுகாப்பே அமெரிக்கா, பிரிட்டன் இவையும் தானும் ஒன்றுபட்ட கொள்கையைப் பின்பற்றுவதற்கு உதவி செய்யுமென்று அது கருதியது.

பெர்ல் துறைமுக சம்பவம் எல்லா விஷயங்களையும் தீர்த்து விட்டது.

படையெடுப்பு அபாயம் முன் நிற்கிறதென்றும், ஆஸ்திரேலியா பூரண சுதந்திரமுள்ள நாடென்றும் 1941 இறுதியிலோ 1942 ஆரம்பத்திலோ அறிக்கை வெளியாயிற்று.

பஸிபிக்கில் ஆஸ்திரேலிய சர்க்கார் வகுக்கும் ராணுவ தந்திர முறையின் விசை அமெரிக்காவிடத்தில் இருக்கிறதென்றும், பஸிபிக் யுத்தத்தை நடத்தும் விஷயத்தில் ஆஸ்திரேலியாவுக்கும் அமெரிக்காவுக்கும் பூரண சுதந்திரமிருக்க வேண்டுமென்றும் பிரதம மந்திரி கர்ட்டின் வற்புறுத்தினார்.

"ரஷ்ய உதவியைப் பெற வேண்டும். பிரிட்டிஷ், சீன, டச்சுப் படைகளுடைய பின்பலத்தைக் கொண்டு பஸிபிக் யுத்த தந்திர முறையை அமெரிக்காவுடன் சேர்ந்து வகுக்க வேண்டும். இதுதான் ஆஸ்திரேலியாவின் கொள்கை" என்று அவர் அறிவித்தார்.

பிரிட்டனைக் கலந்துகொள்ளாமலும், அதற்கு மனுச் செய்துகொள்ளாமலும் ஆஸ்திரேலியாவின் அந்நிய நாட்டுக் கொள்கையை இவ்விதமாக கர்ட்டின் நிர்ணயித்தார். பஸிபிக் யுத்தம் ஆரம்பமானதும் சர்ச்சில் ஓர் அறிக்கையை வெளியிட்டார். அதில் ஆஸ்திரேலியாவைப்பற்றியே அவர் பிரஸ்தாபிக்கவில்லை. உலக யுத்தத்தில் ஆஸ்திரேலிய யுத்தம் ஒரு சம்பவம்தானென்றும் அவர் சொல்லவில்லை. ஆனால் பஸிபிக் யுத்தமானது பொது யுத்தத்தில் ஒரு அங்கமேயென்று ஒப்புக்கொள்ள முடியாதென்று கர்ட்டின் தெளிவாகச் சொல்லிவிட்டார்.

பிரிட்டனின் கஷ்டங்களிலும் கர்ட்டின் அனுதாபமுணர்த்தினார். "படை பலத்தைப் பிரித்துவிட பிரிட்டன் தயங்குவதன் காரணம் தெரிகிறது. ஆஸ்திரேலியா போய் விட்டாலும் பிரிட்டன் இழுத்துக்கொண்டிருக்கலாமென்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் ஆஸ்திரேலியா போவதற்கு இடங் கொடுப்பதில்லையென்று நாங்கள் சங்கற்பம் செய்துகொண்டிருக்கிறோம்" என்றும் அவர் கூறினார்.

இதன் மூலம் ஆஸ்திரேலியா, பிரிட்டன் இவற்றின் ஆபத்துகளுக்கும், நலன்களுக்கும் முரண்பாடு இருப்பதை அவர் சுட்டிக் காட்டி விட்டார்.

இவ்விதம் தன்னுடைய அந்நிய நாட்டுக் கொள்கையை வகுத்துக் கொள்ள ஆஸ்திரேலியா சுதந்திரம் கொண்டாடியதும் அவசரப்பட்டுச் செய்த காரியமில்லை. ஆஸ்திரேலியாவில் தொழிற் கட்சி கவர்ன்மெண்டு 1941 அக்டோபரில் அதிகாரத்தை ஏற்றது முதல் அந்நிய நாட்டு விவகாரங்கள் விஷயத்தில் பின்பற்றி வந்திருக்கும் கொள்கைக்கு இது முற்றிலும்பொருந்தும்.

ஆஸ்திரேலிய பிரதம மந்திரியும், அரசியல் சாஸ்திர வல்லரான அந்நிய நாட்டு மந்திரி டாக்டர் ஈவாட்டும் தாங்கள் செய்வதென்ன வென்பதை அறிந்தே இவ்வித பூர்வாதாரங்களை ஏற்படுத்தினர். அவர்களுடைய மூன்று காரியங்கள் முந்திய மந்திரிகள் திடுக்கிடும்படி செய்யக்கூடியவை:

(1) டாக்டர் ஈவாட் ஒரு ரேடியோ பிரசங்கத்தில் பிரிட்டனின் சகாவான ரஷ்யாவை எதிர்த்து வரும் பின்லாந்து, ஹங்கேரி, ருமேனியா இவற்றின் மீது பிரிட்டன் போர் தொடுக்காதது ஆச்சரியமாக இருக்கிறது என்று கூறினார்.

(2) ஜப்பான் மீது ஆஸ்திரேலிய பார்லிமெண்டு யுத்தப் பிரகடனம் செய்யும்படி அவர்கள் செய்தனர்.

(3) பஸிபிக் யுத்தம் ஆரம்பமாகு முன் ஜப்பானிய எதிர்ப்பு ஏற்படின், அதைச் சமாளிக்க ரஷ்யாவுடன் பரஸ்பர சகாய உடன்படிக்கையை பிரிட்டன் செய்துகொள்ள வேண்டுமென்று ஆஸ்திரேலிய சர்க்கார் அடிக்கடி பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரி காரியாலத்தைக்கேட்டு வந்தது. அதற்குப் பிரிட்டன் செவி சாய்க்க வில்லை யென்று இப்பால் டாக்டர் ஈவாட் அறிவித்தார்.

புதிய கொள்கையிலிருந்து ஆஸ்திரேலியா பின் வாங்கப் போவதில்லை, அது நிலைத்து விட்டது.

குண்டலகேசி

(8-ம் பக்கத் தொடர்ச்சி).

அதைக் கேட்ட பத்திரை திடுக்கிட்டவளாய், "அடிகளே, என் மனம் கவலை மிகுந்திருக்கிறது. அதைத் தாங்கள் அறிந்து ஆசி கூற வேண்டும்" என்றாள். "குழந்தாய் உன் முகத்தைக் கண்டே நான் அறிந்து விட்டேன். உன் மனப் போக்கே உனக்குத் துன்பத்தை அளிக்கிறது. அதுவும் முற் பிறப்பின் பயன்; ஆனால் பின்னர் இன்பம் பெறுவாய். 'சர்வம் துக்கம்,' என்பதை நினைந்து பொறுத்துக் கொள், 'பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்; பிறவார் உறுவது பெரும் பேரின்பம்' என்னும் பொன்மொழி நினைந்து ஆறுதல் பெறுவாயாக" என்று கூறி பிக்ஷுக்களின் குழுவை அடைந்தார் அவர். இந்திர விகாரம் வந்தும் இந்தத் துக்கம் 'விடவில்லையே' என்று ஏங்கினாள் வசந்தி.

பத்திரையின் சிந்தனை

'முன்னே துன்பம் என்றாலும் பின்னே இன்பம் இருக்கிறது, துன்பத்தைப் பொறுத்துக் கொள்வேன். அப்படி என்ன துன்பம் விளையப்போகிறது? ஸத்துகரை நான் மணந்து கொள்வதைப்போன்ற இன்பம் வேறு என்ன இருக்கிறது? நல்ல வேளை, முதலில் இன்பமும் பின்பு துன்பமுமாய் இருந்தால் என் கதி, என்னாவது? வாழ்க்கை முழுவதும் வருந்த வேண்டியதுதான்? என்று எண்ணிக் கொண்டே வெளி வந்தாள் பத்திரை.

"இப்போது. நேராகப் பௌத்த சங்கம் போய் விட்டுப் பின்பு மாளிகைக்குப் போவோம்" என்றாள் வசந்தி; இல்லாவிட்டால் அவள் பாலகபிக்ஷுவுடன் எவ்வாறு பேச முடியும்?

"ஆம்" என்று கூறிக் கொண்டே சிவிகையில் ஏறினாள் பத்திரை. உள்ளூற இருவருக்கும், பௌத்த சங்கத்துக்குப் போவதைப்பற்றி அளவில்லாத சந்தோஷம் உண்டு.

"வசந்தி, எந்த விஷயங்களையும் என்னை யறியாமல் ஸத்துகரிடம் நீ கூறி விடாதே!" என்றாள்.

"நான் கூறுவேனா?" என்றாள் வசந்தி. உடனே அவளும் சிவிகைக்குள் புகுந்தாள்.

சிவிகை ஸத்துக மந்திரத்தை நோக்கிச் சென்றது.

எப்போ வருவாரோ!

காதற் கணிகையீம், மாதர்க் கணிகலமும், 'கற்புக்கு உறையுளும்' ஆகிய இளமங்கை சயந்தி, ஸத்துகன் பிரிவால் இடையறு வருத்த முற்று ஏங்கியிருந்தாள். அவளது வருத்தத்தை உணர்ந்து ஆறுதல் செய்பவன் போல், குறு குறு நடந்து, சிறுகை நீட்டி, செவ்வாய் திறந்து சிறு சொல் மிழற்றி; பேரின்பம் அளித்தான் இளஞ் சிறுவன். 'தன்' இளமைந்தனை நோக்கும்போது ஸத்துகனைக் காண்பது போல் எண்ணி பிரிவை மறந்து இருக்க முற்படுவாள் சயந்தி. ஆனால், பிரிவுத் துயர், இடையிடையே அவளை வருத்தும். 'எப்போது வருவார் எப்போது வருவார்' என்று ஏங்கியிருந்தது அவள் உள்ளம். சிலகணத்திற் கொருமுறை வீதி வழியை உற்று நோக்குவாள். எவ்வளவு முறை நோக்கினும் அவள் ஆவல் தணியவில்லை; வளர்ந்து கொண்டே இருந்தது. விழிகள் பூத்துப் போயின. உள்ளத்தில் துன்ப அலைகள் மேன் மேல் எழுந்து மோதி அலைத்துக் கொண்டிருந்தன. என் செய்வாள் பாவம்! சேற்றில் மலர்ந்த தாமரையென, பரிமளமும், தூய்மையுமுடைய அவள் உள்ளப் பண்பை பாவி ஸத்துகன் நன்கு உணரவில்லை. மலரினும், மெல்லிய அவளது இதயத்தை ஊடுருவிச் சென்றது ஸத்துகனின் பிரிவித்துயர்-ஒரு நாள்-இரண்டு நாள்—அவள் வருந்தவில்லை; நாட்கள் பலவாயின. துயர் வெள்ளம் பெருகுகிறது அவள் மனத்தில். இவள் விரும்பி எதிர் பார்க்குங் காலத்து அவன் வருவதில்லை. இரவில் வந்தாலும் சில நாழிகை இருந்து விட்டு உடனே செல்வான். உள்ளத்தில் வன்மை இல்லை. முன்பு போல் இன்ப மொழிப் பேச்சில்லை. உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உணர்ச்சி நிறை பார்வை இல்லை. பச்சை இளங் குழவியிடம் முன்பிருந்த பாசம் இல்லை. அல்லாமல் அன்றொரு நாள் அவள் கண்ட கனவொன்று அவள் உள்ளத்தை அச்சுறுத்தியது. அது தொடங்கி ஒரே கவலை அவளுக்கு. பாவம்; உள்ளத்தில் இன்பவூற்று வற்றியது, எண்ணி எண்ணி ஏங்கிப் போனாள். ஸத்துகனின் எதிர்பாராத இச்செயல் முறைக்கு என்ன காரணம்? என்று அவள் மனம் ஆராய எண்ணியது.

இன்னதென்று தெரியவில்லை

"இவ்வருஷம் இந்திர விழா தொடங்கியதிலிருந்தே அவர் வேறு பட்டிருக்கிறார்! அதற்குக் காரணம் என்னால் அறிய முடியவில்லை. சென்ற வருஷம் இந்திர விழாவில் எத்துணையோ இன்பங்களை அவருடன் சென்று அனுபவித்தேன். விழாவின் முடிவில் காவிரிச் சங்கமத்தில் அவருடன் சென்று நீராடி வந்தேன். தேவாலயங்களுக்குச் சென்று வணங்கி வந்தேன். ஆனால் இவ்வருஷம்! இந்திர விழா என் மாளிகையோடு நின்று விட்டது. அவர் மீது நான் குற்றம் சொல்லவில்லை. அப்படி ஒன்றும் வெறுப்புடன் அவர் இல்லை. இங்கு வரும் போது அன்புடனேயே இருக்கிறார். முன்பிருந்த குதூகலம் இல்லை. அவர் முகத்தில் பொலிவும் இல்லை; காரணம்? ஏதோ உள்ளக் கவலை! அதை என்னிடம் சொல்வதற்கு விருப்பவில்லை. அது நன்றாகத் தெரிகிறது. பௌத்த சங்கத்தில் ஏதாவது மன வருத்தமோ? அல்லது தந்தையிடம் வருத்தமோ?

நான் அறிவதற்கில்லை. அவரைப் பார்க்கும்போதும், பழைய நிகழ்ச்சிகளை நினைக்கும் போதும் என் உள்ளம் வெயில் வாய்ப்பட்ட புழுப்போல் துடிக்கின்றது; பிரிவுத் துயர்-அல்ல அவர் மனத்தில் உள்ள கவலை, என் உள்ளத்தைத் துளைத்துப் புரைகொண்டு விட்டது. 'காதற் கணிகையாகிய எனக்கு இவர் நாயகராகக் கிடைத்தது பெரும் பாக்கியம்' என்று எண்ணி தருக்கித்திருந்தேன். என் எண்ணத்தில் எரிகக்கத் தலைபட்டு விட்டது, என் நினைவு கனவாகி விட்டது; பகற் கனவாகி விட்டது.

நாகவல்லி கூறிய ஆறுதல்

ஆ! எவ்வளவு பொலிவுடன் முன்பு அவர் முகம் இருந்தது! இப்போது வாடி விட்டது, அவர் பார்வையிலும் பேச்சிலும் ஆழ்ந்த கவலை அவருக்கு இருப்பதாகத் தெரிகிறது. அந்தக் கவலையை நான் உணரக் கூடாதா? என்னிடம் பேசும் போது, குதூகலத்துடனும், சாமர்த்தியத்துடனும் பேசும் அவர் இப்போது, ஒரு குற்றவாளியைப்போல் அடங்கி ஒடுங்கிப் பேசுகிறார். அவருள்ளக் கவலையை என்னால் அறிய முடியவில்லையே! நான் என் செய்வேன்? இம்மாளிகையில் அவரைக்குறித்து இன்றுமுதல் விரதம் பூண்டு என் உடலை மாய்த்துக்கொள்கிறேன்; போதி நாதனே அவருள்ளத்தின் கவலையை அகற்றி முன்புபோல் அவரைச் சுக புருஷராகச் செய்வாயாக' என்று கலங்கி உள்ளம் அழிந்திருந்தாள். அப்போது அவள் தோழி நாகவல்லி பலவாறு ஆறுதல் கூறினாள். "அம்மா, தாங்கள் ஏன் இவ்வளவு கவலைப்படுகிறீர்கள். இரவில்கூட நீங்கள் புத்தி தவறிவிடுகிறீர்கள்!" என்றாள் நாகவல்லி.

"அப்படி என்ன செய்தேன்?" என்று வியப்புடன் கேட்டாள் சயந்தி.

"அன்று கனவு கண்டு எழுந்து ஓடவில்லையா!

"ஆம்; அந்தக் கனவை மறக்க முடியவில்லையே! அதுவே இவ்வளவு கலக்கம்! நாகவல்லி, பெண் பேய், ஒன்று தலைவிரி கோலமாய் என் முன் ஓடி வந்து 'கொலை, கொலை' என்று கூக்குரலிட்டுவிட்டு மறைந்தது. நான் கண்களைப்பொத்தி, அஞ்சியவளாய், எழுந்து ஓடிவந்தேன்! அது முதல்—இரவில் தூக்கமே இல்லை!"

"அப்படியானால் கனவின் பயனை யாரிடமாவது கேட்டுத் தெரிந்து கொள்ளலாமா!"

எல்லாம் விதியின் செயல்

"ஏதோ தீய கனவுதான் அது. அதைத் தெரிந்து கொள்வதில் என்ன பயன்; வருத்தமே அதிகமாகும்; நடப்பது நடக்கட்டும்; எல்லாம் விதியின் செயல்."

அந்தக் கனவின் பயனைப் பற்றி எண்ணும்போது சயந்திக்கு அறிவு சோர்ந்துவிட்டது. அப்படியே கட்டிலில் சாய்ந்துவிட்டாள். நாகவல்லி, மெல்ல, அவளைக் கட்டிலில் படுக்கவைத்தாள். மூர்ச்சை தெளிவதற்கு வேண்டிய உபசரணைகள் செய்தாள். வேறு சேடியர் இருவர் இருபுறமும் விசிறிக்கொண்டிருந்தனர்,

அப்போது ஸத்துகன் எதிர்பாராவிதமாய் அங்கு வந்தான். சயந்தியின் நிலையைக் கண்டு திடுக்கிட்டான். உடனே அவளருகில் அமர்ந்து நெற்றியில் சந்தனத்தால் தெளித்து மெல்லத் தைவந்தான். (தைவரல்—தடவுதல்) சயந்தியின் மூர்ச்சைக்குக் காரணம் என்ன? என்று நாகவல்லியைக் கேட்டான். அவள், சயந்தி கண்ட கனவைப்பற்றிக் கூறினாள். அதைக் கேட்டவுடன் ஸத்துகன் துணுக்குற்றுக் கலங்கினான். 'பெண் பேய், தலைவிரி கோலமாய்க் கொலை, கொலை, என்று கூக்குரலிட்டது!' என்று தனக்குள் பன் முறை கூறிக்கொண்டான். மனக் கலக்கத்தால் நீண்ட பெருமூச்சுவிட்டான். அப்போதுதான் சயந்தி அறிவு பெற்றாள். கண் மலர் திறந்து ஸத்துகனைக்கண்டாள். உள்ளம்குளிர்ந்தது அவளுக்கு. உடனே விரைந்து எழுந்து "என் மீது இவ்வளவு கருணையா?" என்று சொல்லி, அவன் பாதங்களில் கண்ணீரைச் சொரிந்து கழுவி அவனை வணங்கினாள். சயந்தியின் நிலையைக் கண்ட அவன் தன்னை நொந்து கொண்டான். காதலி அழுத கண்ணீரால், கல் நெஞ்சம் படைத்த ஸத்துகனின் உள்ளம் இளகிக் கரைந்து விட்டது.

(அடுத்த வாரம்)

'ஸத்துக மந்திரம்'



பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

கதம்பம்

(ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன்)

ஏற்றப் பாட்டு ஆரம்பத்திலே பிள்ளையார் முதலியவர் தோத்திரங்களோடு ஆரம்பமாகும். சில பாடல்கள் வேறு ஆரம்பம் உடையதாகவும் இருக்கும். சிறு சிறு பாடல்களாக இருப்பது சிறுபான்மையே, பெரும்பாலும் நீண்ட பாடல்களாகவே இருக்கும். சேர்ந்தாற்போல் பல மணி நேரம் இறைக்கும் தொழிலுடையவர்கள் பெரிய பாட்டுக்களைப் பாடுவார்கள். பெரிய பாடலென்ருல், முதலிலிருந்து கடைசி வரையில் உள்ள அடிகள் நூற்றுக்கணக்கில் இருக்கும்; ஆனுல் அவை ஒரே விஷயத்தை முறையாகவும் தொடர்ச்சியாகவும் சொல்லும்படி அமைந்திருப்பதில்லை. மனம் போன போக்குப்படி புராணக் கதைகளையும் தெய்வப் பிரபாவத்தையும் வழிபாட்டு முறையையும் கோத்து அமைத்ததாக இருக்கும்.

ஒவ்வொரு தடவையும் சாலைக் கவிழ்க்கும் போது ஏதாவது ஒரு வாய்பாட்டைச் சொல்லிச் சாலின் எண்ணிக்கையையும் கூட சொல்வான் ஏற்றக்காரன் "மயிலேறி யான் ஒண்ணு," "மயிலேறியான் ரெண்டு" என்பது போலச் சொல்வான். இந்த வாய் பாடு முருகக் கடவுளுக்குரிய முக்கிய ஸ்தலத்தைச் சார்ந்த இடங்களில் வழங்கும். வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமாக வழங்குவதும் உண்டு. சம்பாஷணை யுருவத்தில் அமைந்த ஒரு பாட்டில் வேலையா, சுப்பையா என்ற பெயர்கள் வருவதை முன்பு கண்டோம். அந்த இரண்டும் முருகக்கடவுளின் திருநாமங்கள். ஆகையால் அந்தப் பாட்டும் முருகனை வழிபடுவோர் மிகுதியாக உள்ள இடத்தில் முதலில் உண்டாகிப் பரவியிருக்க வேண்டும்.

இந்த வாய்பாடு எப்படி இருந்தாலும் பத்துச் சாலுக்கு ஒரு தடவை கூறும் கணக்கு மாத்திரம் அநேகமாக எங்கும் ஒரேமாதிரி இருக்கும். 'ஒரு பதியாலொண்ணு', 'இருபதியாலொண்ணு', 'முப்பதியாலொண்ணு' என்று நூறுவரை வரும். ஒருபதால் ஒன்று, இருபதால் ஒன்று—என்பவற்றின் கொச்சை உருவம் அவை என்று தோன்றுகிறது. இப்படி நூறு சால் இறைத்தால் ஒரு பரியமென்று சொல்வார்கள். ஆயிரத்துக்குப் பத்துப் பரியம். ஒவ்வொரு பரியத்திற்கும் தனித் தனியே வேறு வேறு பாட்டுக்களைக் கற்றுக்கொண்டு சொல்பவர்களும் உண்டு. இப்போது உள்ள பாட்டுக்களைப் பார்த்தால் பல அடிகள் குறைந்துபோய் வார்த்தைகள் சிதைந்து இருக்கும்.

* * * *

நாடோடிப் பாட்டுக்களில் முக்கியமாக ஒன்றைக் காணலாம். ஒரே விஷயத்தைப் பல வகையாகத் திருப்பித் திருப்பிச் சொல்வது மற்றப் பாடல்களில் குற்றமாகலாம். ஆனுல் நாடோடிப் பாட்டில் அப்படி அமைந்திருப்பது முக்கிய லக்ஷணங்களுள் ஒன்ருகும்.

துரியோதனன் தன்னுடைய சேனைகளுடன் புறப்பட்டு வருகிருன். சேனை மிகுதியினுல் அண்டங் கிடுகிடென்கிறது. பூமி நடுநடுங்கப் போர் மன்னர் போகும்போது தூள் எழும்புகிறது. அதை நாடோடிப்பாட்டு வருணிப்பதைப் பாருங்கள்:

கருந்தூள் எழும்பியது
  கண்ணை மறைக்கிறது
சேந்தூள் எழும்பியது
  திசையை மறைக்கிறது
மண் தூள் எழும்பியது
  வானம் மறைக்கிறது!

துரியோதனன் பஞ்சபாண்டவர்களைக் காட்டுக்கு ஓட்டினவன். இதை ஒரு தரம் சொன்னுல் போதாதோ? எத்தனை தரம் சொல்கிருன் நாடோடிப் பௌராணிகன்:

பாண்டவர்கள் ஐவரையும்
  பரதேசம் ஓட்டினனே
மன்னவர்கள் ஐவரையும்
  வனம்ஓட்டி விட்டானே
காவலர்கள் ஐவரையும்
  காட்டிற் சேவுத்தினனே
உத்தமர்க ளைவரையும்
  ஊரைவிட்டோட்டிவிட்டான்
ஐவரையும் ஓட்டி விட்டான்
  ஆளுகின்ருன் படுபாவி!

ஐந்து பேர்களையும் ஓட்டினதற்காக ஐந்து தடவை திருப்பித் திருப்பிச் சொல்ல எண்ணினுனே என்னவோ!

புருஷனில்லா மங்கையர்கள்
  பூவையர்கள் இத்தனைபேர்
ஆளனில்லா மங்கையர்கள்
  அரிவையர்கள் இத்தனைபேர்
கணவனில்லா மங்கையர்கள்
  காரிகைமார் இத்தனைபேர்
சிறையிருந்து வாடுகின்ற
  செய்தி தெரிய வேண்டும்.

பல தடவை அடுக்கிச்சொன்னுல்தான் சொல்பவனுக்கும் திருப்தியாகிறது; கேட்கிறவனுக்கும் உறைக்கிறது.

இந்த லக்ஷணத்தை ஏற்றப் பாட்டிலும் பார்க்கலாம். ஏற்றத்தில் சாலைத் தொங்கவிடுவதற்கு மூங்கிற்கோல் வேண்டும். அந்தக் கோல் நல்ல உறுதியாக இருக்கவேண்டும். நன்ருக விளைந்ததாக இருந்தால் சாலின் பாரத்தைத் தாங்கும். கிணற்றின் ஆழத்திற்குத் தக்கபடி கோலின் நீளத்தை அமைத்துக் கொள்வார்கள். அப்படி உள்ள மூங்கிற்கோலின் பிறப்பிடத்தைப் பாட்டிலே சொல்கிருன் ஏற்றக்காரன்:

தன் எழில்வாய்ந்த சருமத்தைக் காப்பாற்றும் வழியைச் சொல்கிருள்!

"என்னுடைய சருமத்தை மிருதுவாகவும், அழகாகவும் வைத்திருக்க லக்ஸ் டாய்லெட் சோப் ஏதுவாயிருக்கிறது என்பது தெரிந்து கொண்டேன்" என்று "ஏக்ராத்" படத்தில் நடித்து கீர்த்தி பெற்றுள்ள இந்த அழகிய நடிகை சொல்கிருள். லக்ஸ் டாய்லெட் சோப்பின் நுரையை என் சருமத்தில் மிருதுவாகத் தேய்க்கிறேன்; அந்த நுரைக்கிருக்கும் உயர்தர மகிமையினுல் சருமத்திலுள்ள அழுக்குகளைப் போக்கி, என் சருமத்தில் மாசு ஏற்படாதபடி சுத்தமாக்குகிறது. பிறகு சுத்தமான குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்கிறேன். தினமும் அனுஷ்டிக்கும் இந்த சாதாரண முறை என் சருமத்தை சுத்தமாகவும், வசீகரமாகவும் செய்வதுடன் மிருதுவும், வாசனையும் அளித்து சருமத்தைப் புதிதாக்குகிறது.

லக்ஸ் டாய்லெட் சோப்

சினிமா நடிகளின் சுந்திர சோப்

LTS. 59-172 TM. LEVER BROTHERS (INDIA) LIMITED

எட்டடிக்குக் கோலு
  எடக்கிநாட்டு மூங்கில்
பத்தடிக்குக் கோலு
  பழவக்காட்டு மூங்கில்
அஞ்சடிக்குக் கோலு
  அழகிநாட்டு மூங்கில்.

கிணறு வெட்டியதும் துலாம் நாட்டியதும் மடல் அமர்த்தியதும் பாட்டில் வருகின்றன.

எட்டடி அளந்து
  வெட்டினுன் துரவே
பத்தடி அளந்து
  பாச்சினுன் துலாத்தை
அஞ்சடி அளந்து
  அமர்த்தினுன் மடலே
எட்டடிக்குக் கோலு
  எடக்கிநாட்டு மூங்கில்
பத்தடிக்குக் கோலு
  பவழக்காட்டு மூங்கில்
அஞ்சடிக்குக் கோலு
  அழகிநாட்டு மூங்கில்
எட்டடியும் கோலும்
  விட்டாடுமோ பானை
பத்தடியும் கோலும்
  பன்னுடுமோ ஏத்தம்
ஏத்தங்களைப் பார்த்தால்
  எமன் சேடலாட்டம்
உபய நதி வாழ
  ஒருபதியா லோண்டு.

இந்த வருணனையில் நமக்கு எல்லாம் தெளிவாகப் புரியுமென்று சொல்வதற்கில்லை. அவன் சொல்லுகிற கணக்கு, சரியான நிதானத்தின்மேல் சொல்வதென்று கொள்வதும் அவசியமன்று. பாட்டுப்போகிற போக்கிலே சிறிது பொருந்தமுள்ள விஷயங்களும் வார்த்தைகளும் அவனுக்கு அகப்படுகின்றன. அவற்றை வைத்துக்கொண்டு பொழுதுபோக்க வழி தேடுகிருன். அந்த வார்த்தைகளிலும் வருணனைகளிலும் உள்ள ருசியைவிட அவன் பாடும் தோரணையிலே அதிகமான சுவை இருக்கிறது.

அவனுடைய பாட்டுக்கு ஏதாவது விஷயம் அகப்படாமல் போகவில்லை. அருகர் கோயில் வலம் வருவதை ஒரு பத்துச் சாலுக்கு வைத்துக்கொள்கிருன். முருகருக்கு வள்ளி நேசனப் பெண் ஆன கதையை ஒரு பத்துச் சாலுக்குப்பாடி இறைக்கிருன். அவனுடைய ஊருக்கு அருகிலுள்ள விசேஷ ஸ்தலங்களைப்பற்றிய சமாசாரங்கள் ஒருபத்துச்சாலுக்கு விஷயத்தை நிரப்புகின்றன. காஞ்சீபுரத்தைச் சார்ந்த இடங்களிலுள்ளவர்கள் வரதராஜரை மறக்க முடியுமா? அவருடைய மாகாத்மியத்தை விவரமாகத் தெரிந்து கொள்ளா விட்டாலும் திருவிழாவிலே அப்பெருமான் ஆனை மேலும் குதிரை மேலும் தேர் மேலும் வந்ததை ஏற்றம் இறைப்பவன் தரிசித்து இன்புறாது இல்லையா? அந்தத் தரிசனத்தை நினைப்பூட்டிக் கொண்டு அவன் கவிதை செய்கிருன்.

அந்திக்கு வரதர்
  ஆனைமேல் வருவார்
என்றைக்கும் வரதர்
  தேர்மேல் வருவார்
காலமே வரதர்
  அன்ன வாகனமோ
அந்திக்கு வரதர்
  அன்ன வாகனமோ
நாளைக்கு வரதர் நாக வாகனமோ
ஹரிஹரி கோவிந்தா
  அச்சுதா அனந்தா
பச்சைநீல வர்ணு
  பாரளந்த மெய்யா
பாண்டவர் சகாயா
  ....அச்சுதனைப் பாட
  அறுபதியா லோண்ணு.

இதைப் பத்துச் சால் பிடித்துப் பாடி ஆரும்பத்தைச் சரிக்கட்டி விட்டு அடுத்த பத்தைத் தொடங்குகிருன் இப்படியேஒன்றைவிட்டொன்று பற்றிஏற்றப் பாட்டு உருவெடுக்கிறது.

சடையாண்டியின் கோலத்தை அவன் அழகாக வருணிக்கிருன்..அவர் நீறு பூசிக் கபாலம் கையிலேந்தி மான் தோலும் புலித்தோலும் பிற தோலும் புனைந்து வருவதை,

தோங்கும் சடையாண்டி
  எங்கும்வரு வாரோ
நீறுபூசும் ஆண்டி
  நித்தம்வரு வாரோ
சங்குகையி லேந்திச்
  சாரிவரு வாரோ
பாலங்கையி லேந்திப்
  பாடிவரு வாரோ
அன்றுரித்த மான்றேல்
  ஆதனம் புலித்தோல்
நேற்றுரித்த மான்றேல்
  நித்தமும் நரித்தோல்
கன்றுரித்த மான்றேல்
  கரடிமான் புலித்தோல்

என்று சித்திரிக்கும்போது சிவபெருமானை எத்தனை விதமான தோலாண்டியாக பார்க்கிறோம்.

மார்க்கண்டேய புராணத்தை அவன் தன்னுடைய பத்துச் சாலாலே அளந்து விடுகிருன்:

ம்ருகண்டரைப் போலத்
  தவம்பண்ணவர் இல்லை
ம்ருகண்ட ரிஷிக்கு
  முன்னேரிட்ட சாபம்
பிள்ளையில்லை யென்று
  பெருந்தவங்கள் செய்தார்
மைந்தனில்லை யென்று
  மாளாத்தவம் செய்தார்
ம்ருகண்டு ரிஷிக்கு
  மார்க்கண்டர் பிறந்தார்
மாக்கண்டரிஷிக்கு வயசுபதினறு
வரமளித்தார் ஸ்வாமி
  என்றும்பதி னறுய்
ஈரெட்டுவயசாய் ஈசுவரரும் தந்தார்
மார்க்கண்டனு மப்போ
  ஆற்றுமணல் சேர்த்து
ஹரனைப்பூஜை செய்து.
  ஈசுவரனைப் பார்த்தார்
மார்க்கண்டனைக் கொல்ல
  வாருன் எம ராஜன்;
காலதூதர்வந்து கட்டளை படியே
கடுங்கோப மானுர்..............
ஈசுவரரும் பார்த்து
  எமனை உதைத்தார்.

புராணங்கள் புஸ்தக ரூபத்திலே வருவதற்கு முன்னேயே, ஊர் ஊராக இந்தச் செய்திகள் நாடோடி இலக்கியத்தில் தெய்வங்களின் மான்மியங்கள் புகுந்து கொண்டன. கேட்பதற்குப் பொறுமையும், தெரிந்து கொள்வதற்குப் பழக்கமும், அனுபவிப்பதற்கு உள்ளமும் இருக்குமானுல் உதயத்துக்கு முன்பிருந்து அஸ்தமனம் வரை கேட்கலாம். பல புராணங்களின் கதம்பமாகவும் பல செய்திகளின் கோவையாகவும் பல உணர்ச்சிகளின் மாலையாகவும் ஏற்றப்பாட்டு அமைந்திருப்பதை அப்போது உணரலாம்.

இந்தியாவின் சேவைக்கு



எங்களால் உபயோகிக்கக் கூடிய எல்லாவித போக்கு வரவு ஸாதனங்கள்..

நீங்கள் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் எங்களால் இயன்றவரையில் எங்கள் ஸாமான்களை தங்களுக்கு அதிக சீக்கிரத்திலும் யாதொரு தடங்கலில்லாமலும் மேன்மேலும் அனுப்ப ஏற்பாடுகளை உபயோகிக்கப்படுகிறது. ரயில்கள், கப்பல்கள், படகுகள் முதலான ஸாதனங்கள் அதிக தூரமான இடங்களுக்கு எங்கள் தொழில் சாலைகளிலிருந்து ஸாமான்கள் எடுத்து செல்லுகின்றன. அருகாமையிலிருக்கும் இடங்களுக்கு, மோட்டார் வண்டிகளும், படகுகளும் உபயோகப்படுகின்றன. முடிவிலே கை வண்டிகள் மூலமாயும் தங்களுக்கு சாமான்கள் விற்கப்படுகின்றன. தற்போதிய மிக நெருக்கடியான ஸமயத்தில் தங்களுக்கு உண்டாகும் அசௌகரியங்களை எங்களால் இயன்றவரையில் குறைக்கவேண்டுமென்பதே எங்கள் விருப்பம். ஆனுல் உங்கள் நலத்திற்காகவே உங்கள் உதவியை கோருகிறோம்.

உங்களுக்கு வேண்டிய அளவிற்கு மேல் ஸாமான்களை வாங்காதீர்கள். அப்படி செய்தால் தாங்கள் எல்லோருக்கும் ஸரிஸமானமாயும் நியாயமான விலையோடும் எங்கள் ஸாமான்களை கொடுக்க ஸாத்தியமாகும். மேலும் நீங்கள் ஸாமான்களை வாங்கும்போது உங்களுக்கு வேண்டிய ஸாமான்களை ஸரியான விலைக்கு வாங்குவீர்கள்.

ஸாமான்களை உபயோகிப்பவர்களின் நன்மைக்காக

டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி

யாரால் பிரசுரிக்கப்பட்டது.

வாஹன அறையில் அமளி

சிறுவர் பகுதி

★

ஸ்ரீ ப. சு. சுவாமிநாதன்

"அப்பா கருடா, பார்த்தாயோனே? என் முதுகைப்பாரு, கொழுக் கட்டையாட்டமா வீங்கிப் போயிருக்கு! நான் தான் என்னடா பண்ணுவேன்? அந்தப் பரமசிவன் என் முதுகிலேறிக் கொண்டு அடிக்கிற 'லூட்டி' உண்டோல்லியோ 'சிவ சிவா' சொல்லித்தரமில்லே. போதாக் குறைக்கு தன் மனைவியையும் கூட என் மேல் ஏற்றிக்கிண்டு "சுத்துடா ஊரை" என்கிறார். இரண்டு பேருமா ஏறிண்டா என் முதுகு என்னடா ஆகும்! நீயே சொல்லுடா!' என்று முதுகை வளைத்துக்கொண்டு நின்றது ரிஷப வாஹனம்.

"ஆமாண்டா, உனக்கென்ன சொல்லமாட்டாயோ? உங்க எஜமான் எல்லாம் இத்தோடு விடறாரே! எங்க எஜமான் செய்யும் வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறாய்? என் கழுத்துமேலே ஏறிண்டு அவர் படுத்தும்பாடு! 'ராம—ராம' என்ன சொல்லுவேன்போ அவர் காலுக்கு நடுவே என் கழுத்து மாட்டிண்டு படும் பாடு அந்த பெருமாளுக்குத்தான் தெரியும்! அத்தோடு விட்டாரா அவர்! 'மூட்டிக்கால் போட்டுண்டு நடடா பயலே' என்று 'ஆர்டர்' வேறு போட்டுவிட்டார். மூட்டிக்கால் போட்டு போட்டு என் கால் ரத்த விளாராகக் கிடக்கு. நானுந்தான் 'பெருமாளே' எதுசொன்னாலும் செய்யறேன், ஆனால் இந்த மூட்டிக் கால் மட்டும் போடச் சொல்லாதீங்கோன்னு என் இரண்டு கையும் நீட்டி கேட்டுக் கொண்டு வரேன். அவர் காதிலே விழுந்தாத்தானே? தலை எழுத்து! எனக்கு இப்படி ஏரு. எஜமான் வந்து வாய்க்கணமாங்கும்? 'இந்த மயிலைப் பாரு! எப்படி கவலையற்று கிடக்கு!' என்று தன் வருத்தத்தை தெரிவித்துவிட்டு முழங்காலை தடவிக்கொண்டது கருடன்.

"ஆமாண்டா, மயில் அதிஷ்டக்காரந்தாண்டா!" என்றது ரிஷபம்.

பாம்புக் குஞ்சைக் கொத்துவதில் மூனந்திருந்த மயில் கோபத்துடன் இருவரையும் பார்த்தது. அதன் கண்களில் நெருப்புப் பொறி பறந்தது. "ஏண்டா பசங்களா உங்களுக்கு வேறு வேலை கிடையாதோ? தெய்வமே யென்று கிடக்கிற என் வயிற்றெரிச்சலை ஏன் கொட்டிக்கிறீர்கள்! என் கஷ்டத்தைவிட நீங்கள் ரொம்ப அனுபவித்துவிட்டீர்களோ?" என்றது கோபமாக.

"என்ன பிரமாத கஷ்டத்தை அனுபவித்துவிட்டாய் அப்பா?" ரொம்பக் குறைப்படுகிறாயே! என்றது இரண்டும்.

"அதைக் கேட்காதீங்கோடா. என் வயிற்றை எரிகிறது. உங்க எஜமானர்களுக்கெல்லாம் ஒரு முகம் இரண்டு கைகள் இருக்கும். இவருக்கோ ஆறுமுகங்கள்! பன்னிரெண்டு கைகள்! அப்படியானால் எவ்வளவு கனமாக இருப்பார் என்று பார்த்துக் கொள்ளுங்கள்! அவர் கையிலே இருக்கிற ஆயுதங்களை தூக்குவதற்கு மாத்திரமே 3 வண்டிகள் வேணும்: அத்தனை ஆயுதங்களையும் ஒண்ணுவிடாமல் தூக்கிக்கொண்டு என் முதுகிலே ஏறிப் புறப்படுகிறார். இவ்வளவு தான் என்று நினைக்கிறீர்களோ! அட ஷண்முகா! ஷண்முகா!! அவருக்கு இரண்டு மனைவிகளாம். அவர்கள் இருவரும் போடும் ஒய்யாரத்தையும், மினுக்கலையும் பார்த்தால் எனக்கு என்ன ஆத்திரம் வரது தெரியுமா? அவர்களும் என்மேல் ஏறிக்கொண்டால் நான் திக்கு முக்காடி போய்டுவேன். என் காலைப் பார்த்தேளா? ஈர்குச்சியாட்டமாயிருக்கு இத்தனை சுமையும் என் மேல் ஏறிண்டா என் கால் என்னவாகும்? சற்றுயோசித்துப் பாருங்கோ" என்று தன் காலைத் தூக்கி காண்பித்துக் கண்ணீர் வடித்தது மயில் வாஹனம்.

"ஆமாண்டா, உனக்குந்தாண்டா கஷ்டம். நம்மைவிட மூஞ்சோறு பாடு தேவலை. குஷாலாயிருக்கு! நம்மைப்போல கஷ்டப்படாமல் ஏதோ பிள்ளையார் அண்ணாவிடம் இருந்துண்டு அவர் கொடுத்த கொழக்கட்டையையும் சாப்பிட்டுக் கொண்டு சுகமாயிருக்கு" என்றது கருடன்.

பிள்ளையார் தின்று பாக்கியிருந்த கொழக்கட்டையையும் தின்றுகொண்டிருந்த மூஞ்சோறு எல்லையற்ற கோபத்துடன் 'கிரீச்' என்று கத்தியது. "டேய், கருடா!

உனக்கு நாளுக்கு நாள் வாய் துளுத்துப்போச்சு! என் கிட்டே ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் நன்னா உதை வாங்கப் போறே" என்றது.

"ஏண்டா? உள்ளத்தைச் சொன்னா உடம்பு எரியறது?" என்றது ரிஷபம்.

"ஓஹோ, உள்ளத்தைச் சொல்வதில் ரொம்ப புலி பாரு நீ! ஏதோ, கொழக்கட்டையைத் தின்னுண்டு சுகமாயிருக்கேன் என்று நினைச்சிண்டு இருக்கே. நான் திண்டாடித் தெருவிலே நிற்கிறது உனக்கு என்னடா தெரியும்? 'விக்னேச்வரா'ன்னு பொந்தில் கிடந்த என்னை இந்த தொந்திக் கணபதி காதைப் பிடித்துக் 'கரகர' வென்று வெளியே இழுத்துக் கொண்டு போய் என்மேல் சவாரி செய்ய ஆரம்பிச்ச பொழுது எனக்கு வந்த கோப முண்டோல்லியோ! அவர் எப்படிப்பட்ட பேர் வழி என்கிறீர்கள்? சட்டி சட்டியாகக் கொழுக் கட்டையைத் தின்று தின்று குதிர்மாதிரி பெருத்துக் கிடக்கிறார். நானோ ரொம்பச் சிறிசு. அவர் என் மேலே ஏறி உட்கார்ந்தால். ஏதடா, மூஞ்சோறு சின்னது தானே!...... அது மேலே போய் ஏறி உட்காருகிறோமே. அது சட்னி ஆகி விடாதா?— என்று யோசித்துப் பார்க்மாட்டாரோ! நான் என்ன பண்ணுவேன் என் தலையெழுத்து இப்படியா ஆகணும்?" என்று கண்ணைத் துடைத்துக்கொண்டது மூஞ்சோறு.

"ஐயோ எனக்குக்கூட அழுகை வருதுடா, இந்தப் பேர் வழிகள் செய்யறது அத்தனையும் அக்ரமமாகத் தாண்டா இருக்கு" என்றது கருடன்.

"நம்ப மேலே ஏறி என் பிராணனை வாங்குகிறார்.

(அடுத்த பக்கம்)

அட்டைப் படம்

★

'ஜவாப்' என்ற ஹிந்திப் படத்தில் தோன்றும் கண்ணன் டாலா.

காஞ்சீ ஜோஸியர்

ஒரு வருஷப்பலன் மாசவாரி எழுத ரூ. 3. ஆருடம் 5 கேள்விகளுக்குபதில் ரூ. 1. வி. பி. அணா 5.
ஜனன கால விவரம் OR எழுதும் நேரம் தேவை.
ஹனுமான் ஆச்ரமம், திருத்தணி. SI

நவ நாகரீகம்

பட்டண வாழ்க்கை

(காசினி எழுதியது)

"என்னைக் கேட்டால் இந்தக் கோடைக்கு எல்லாரும் சிவனேனு கிராமத்துக்குப் போகலாம்!' என்று என்னுடைய அத்தை சொன்னாள்.

'ஆமாம்; போகலாம். முதலாவதாக, பணச் செலவு குறையும். இந்த நாளிலே, உதகமண்டலம், கொடைக்கானல் ஆகிய இடங்களுக்குப்போனால் தலைக்கு மேலே செலவு ஆய்விடும்! ஆனா இந்த கிராமாந்திர வாழ்க்கை மூன்று நாளுக்கு மேல் ரஸிக்கமாட்டேன் என்கிறதே? போனவருஷம் ஏப்பிரல் திகில் போது கிராமம் பேரய்ப் பட்டபாடு போராதா?' என்றாள் லேடி. சுந்திராசாரி பெண் கமலம்.

'அண்டா இல்லை, குடமும் இல்லை, அடுக்குஜோடு தவலை தானுமில்லை, குண்டான் இல்லை, பானை இல்லை, உனக்குக் குத்தி விளக்குத்தான் ஏண்டி இல்லை என்று மாமியார், மாட்டுப் பெண்ணைக் கேட்டாளாம்! அப்படித்தான் இருக்கு உங்கள் பட்டணத்து வாழ்க்கை!' என்றாள் என் அத்தை.

'யுத்த காலம்; சாமான் கிடைப்பது கொஞ்சம் கஷ்டமாக இருக்காக்கும். அதனாலே என்ன? வெயிலிலே போனால்தானே நிழல் அருமை தெரியும்?

இந்த எல்லாம் கஷ்டங்களாகநினைச்சுக்காமல்,வாழ்க்கையில் ஏற்படும் அனுபவங்களாக எண்ணிக்கொண்டால் போச்சு! இதுக்காக பட்டிக்காட்டைப் பார்க்க ஓடுவாளோ?' என்றாள் மாலினி.

'உனக்கென்ன அம்மா இதுவும் சொல்லுவாய், இன்னமும் சொல்லுவாய். வீட்டுக்கு வேண்டிய சாமான்களை எப்படியோ, அகத்துக்காரரும் மாமியாரும் பார்த்துக்கொள்ளுகிறார்கள். சின்னப்பாட்டி ஈர விறகே புகையே என்பதை எல்லாம் பாராட்டாமல் வேளா வேளைக்குச் சமைத்து வைச்சு விடுகிறாள்' என்றாள் பக்கத்தாத்து பங்கஜம்.

'ஆமாம்னு! எங்காத்து சமையல்காரி, அம்மா சுவரை வைச்சுக்கொண்டுனு சித்திரம் எழுதணம்? எனக்கு ஏற்கனவே கண் கொஞ்சம் தொந்திரவு தான். நீங்கள் வாங்கி இருக்கும் பச்சைக் காட்டு விறகை அடுப்பில் வைத்து ஊதி ஊதி நெஞ்சு எரிவெடுக்கிறது; புகை கண் அவிஞ்சுவிடும்போலிருக்கு, அடுத்த மாசம் வரை எப்படியோ செய்கிறேன். அதுக்குள் வேறு ஆள் பார்த்துக்குங்கோ என்று நோட்டீஸ் கொடுத்துட்டா. சமயலை நினைச்சுக்கொண்டாலே, தலையை வலிக்கிறது!' என்றாள் சுலோசனா.

'நீங்கள் இப்படி கையிலே ஆகாதவர்களாக இருக்கும்வரையில் வேலைக்காரர்கள் இட்டது சட்டம்தான். சமையல் என்றால் இப்படி ஒரு பெண் பயந்தால் அவாள் ஏன் தலைக்கு மேலே ஏறமாட்டா? பேஷாய்ப் போய்க்கோ; நான் அரிசியை நனைத்துச் சாப்பிடப் போரதில்லை என்று தைரியமாய்ச் சொல்ல இந்த நாளிலே உங்களுக்குத் துப்பில்லை. கஷ்டம்!' என்றாள் பங்கஜத்தின் மாமியார்.

'எங்க ஊரிலே இந்த விறகுப் பஞ்சம் என்னது என்பதே தெரியாது. கருவேல மரக் கட்டை திவ்யமாய் எரியும். வாய்க்காலிலே நிறைய ஜலம் ஓடும். காயும் கறியும் பச்சுப்பச் சென்று கிடைக்கும். பாலும் தயிருமாகச் சாப்பிடலாம். ஆனா இதெல்லாம் உங்கள் காதிலே எங்க ஏறப்போரது? சினிமா இல்லை, கிளப்பில்லை, ரேடியோ இல்லை, பஸ் இல்லை, டிராம் இல்லை, மொத்தத்தில் போது போகல்லே என்பீர்கள்? பட்டண வாழ்க்கை ரத்தத்தில் ஊறி இருக்கு! உங்களைச்சொல்லியும் குத்தமில்லை!' என்றாள் என் அத்தை.

'ஆமாம்; கேவலம் சுகமாகச் சாப்பிட்டால் மட்டும் போருமா? பகுத்தறிவு இருப்பதற்கு அடையாளம், நாகரீக வாழ்க்கையில் கலந்துகொள்ளுவது தானே? மனித லக்ஷியம் மேலானது இல்லையோ?' என்றாள் மாலினி.

'ஆமாம்; இவ்வளவு பேசுரேளே! நீங்கள் எல்லாரும், வாரம் தவறாமல் பாட்டுக் கச்சேரி, சினிமா, நாடகம் என்று போவதையும் நாள் தவறாமல் கிளப், பீச்சு, விஸிடிங் என்று வெளியே போரதையும் தவிர, நாகரீக வாழ்க்கையில் என்ன சாதித்திருக்கிறீர்கள்? கிராமம் போனால் இப்படிச் சுத்த முடியலை; போது போகலை! என்று பங்கஜத்தின் மாமியார் ஒரு போடு போட்டாள். இதிலிருந்து தர்க்கம் வலுத்தது. கடைசியாக என் அத்தை ஒரு முடிவு சொன்னாள்.

'சும்மா வாதாடி என்ன உபயோகம், பட்டண வாழ்க்கை காபி குடிப்பது மாதிரி. ஒரு தரம் பிடிச்சுவிட்டால், அப்புறம் கிராமவாழ்க்கையும் ரஸிக்காது; ரஸிக்கணம் என்றால் பாடு பட்டுத்தான் பழக்கிக்கணம்!' என்றாள். என் அத்தையின் தீர்மானம் எப்படி?

ஒரு பச்சடி

சமையல் என்றதும் ஞாபகம் வருகிறது. இளம் வெண்டைக் காய்களையும், தக்காளிப் பழத்தையும் சேர்த்து நீ பச்சடி பண்ணிப் பார்த்திருக்கிறாயோ? நல்ல ருசியாக இருக்கும், வெண்டைக்காயைப் புளிப் பச்சடிக்கு நறுக்குவது போல் பில்லை, பில்லையாக நறுக்க வேண்டும். இதற்குக் காரம் வேண்டிய அளவுக்குப் பச்சை மிளகாய் போட்டு, கடுகு பெருங்காயம் தாளித்து, கொஞ்சம் நெய்யும், எண்ணெயுமாகக் கலந்து வைச்சு, வெண்டைக்காயை நன்றாக வதக்கணம். இதில் துண்டு செய்யப்பட்ட 'டொமாடோ' பழத்தைப் போட்டு, உப்பும் போட்டு, நன்றாக வதக்கணம், ஒரு கை தண்ணீர் தெளிக்கலாம். இஷ்டமானால் கொஞ்சம் தண்ணீர் போட்டுப் புச்சடியை நீர்க்கவும் வைக்கலாம். நல்ல காரம் போட்டுச் செய்து, குழம்பு மாதிரியில் இதை உபயோகிக்கலாம். எப்படிப் பண்ணினாலும், வாசனையாக, ருசியாக இருக்கும்.



சென்னை பிரஸ் போட்டோ சொந்தக்காரர் ஸ்ரீ ஏ. சரபோஜி ராவின் பெண் ஸ்ரீமதி லீலாவதிக்கும், நாகப்பட்டினம் ஸ்ரீ பி. ஏ. செல்வம் பி.ஏ.,க்கும் சமீபத்தில் விவாஹம் நடைபெற்றது.

(முன் பக்க தொடர்ச்சி)

கள்? வேணும்னு நடந்து போகட்டுமே" என்றது ரிஷபம்.

"ஏன், அவாளுக்கு ஒரு சமயம் நடக்க முடியாமே போனால் ஒரு காரில் போகட்டுமே. இவாளெல்லாமாகச் சேர்ந்து பழைய விலைக்காவது ஒரு பெரிய காராகப் பார்த்து வாங்கட்டுமே. அவாவா வேண்டும். போது போகப் படாதோ? நம்ம பிராணனை ஏன் வாங்குகிறார்கள்? என்றது மயில்

"ரொம்பச் சரிதாண்டா! வாய் புளிச்சுது, மாங்காய் புளிச்சுதுன்னு பேசரே. ஏதோ வேண்டுமானால் புதிய காரையே அவர்கள் வாங்கிப் போடட்டும். அவர்கள் திரிச்சலுக்கு பெட்ரோல் யார் கொடுக்கிறது? காரை வாங்கிட்டு எல்லாரும் அதைப் பின்னாலேருந்து தள்ள வேண்டியது தான்! அது முடியாது போனால்,மறுபடியும் அதுவரை நம்ம கத்தையே வந்து அழைப்பார்கள்! வேறு யோசனை ஏதாவது இருந்தாச் சொல்லுங்கோ" என்றது கருடன்.

"ஏதோ பார்க்கலாம். அவர்கள் காரை வாங்கிவிட்டு எப்பாடியோ பார்த்துக் கொள்ளட்டும். அதுவரை நாம் தன்னும் வரையில் காலத்தைத் தள்ளிப் பார்ப்போம்! என்றது ரிஷபம்.

"நாம்ப இடத்தை கொடுத்து கொடுத்துதான் அவர்கள் தலைமேல் ஏறி உட்கார்கிறார்கள். நாளையிலிருந்து எல்லோரும் சேர்ந்து "ஸ்ட்ரைக்" செய்துடுங்கோ, இனி உங்களை தூக்க முடியாது என்று" என தன் மூளையை உபயோகித்தது மூஞ்சோறு. இதுபற்றி வாஹன அறையில் ஒரே அமளியாயிருந்தது.

"ஆமாண்டா அதாண்டா சரி, இனி யார் வந்தாலும் தூக்குவது கிடையாது" என்று எல்லாம் ஏகமனதாக தீர்மானம் செய்து விட்டன.

இதற்குள் கோவிலில் மணி "டணர் டணர்" என்று அடித்தது. வாஹன அறைக் கதவு திறக்கப்பட்டது.

"அப்பா சோமு! புஷ்பமாலை, பட்டு வஸ்திரம், நகை எல்லாம் கொண்டு வரச் சொல்லு. சீக்கிரம் அலங்காரம் செய்து ஸ்வாமியைக் கிளப்பி யாகணும்". என்று குருக்கள் உள்ளே நுழைந்தார்.

எல்லா வாஹனங்களும் நடு நடுங்கிப் போய் விட்டன. குருக்களைக் கண்டால் அவைகளுக்கு அவ்வளவு பயம். எல்லாம் பயத்துடன் மௌனமாக ஒன்றை ஒன்று பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தன. ஸ்வாமி திவ்யமான அலங்காரத்துடன் வாஹனாரோஹணம் செய்தார். ஸ்வாமி புறப்பாடாயிற்று 'நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கிறது' என்று எண்ணியவாறு வாஹனங்கள் வீதி வலம் வந்தன.

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன முதற்குரவர் ஸ்ரீ குருநமச்சிவாய தேசிக சுவாமிகள்

குருபூசை நன்னாள் விழாவன்று இருபதாம் வழித்தோன்றல்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள்மீது வாழ்த்துப்பா.

★

அறுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

சீரேறுந் துனிறைசைவளர் திருவேறுங் குருநமச்சி வாய தேவன்
பேரேறு மணிவாச கருக்கருள்செய் பிரானினற்றாள் பேணிப் போற்றித்
தாரேறு தலையின்மிசைத், தான்சூட்டப் பெற்றுயர்ந்த தகைமை சான்ற
சீரேறு மசுபதிநா விஞ்ஞான்றே யுற்றதுவந் திறைஞ்சி வாழ்த்தி. (1)

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ வென்பயாம் வாழ் வாழ்த்தித்
தாழ்த்ததலை மீமிசைக்கை குவித்தேத்தி யடிபரசித் தண்டே னூறி
யூழ்த்தமலர்த் தொடையல்புனை யழகினைநங் கண்ணுர வுற்று நோக்கிப்
பாழ்த்தபவப் பரவையினைக் கடக்கவலன் றாள்புணையாப் பற்று வாமே. (2)

பற்றுகவோர் பற்றுமற்றான் பற்றினையென் பார்புலவர் பாசப் பற்றுஞ்
செற்றமுநீத் துயர்பழைய வடியார்தந் திருவடியே திறனுப் பற்றி
உற்றவிடத் துறுபசிதீர்த் தொப்புரவி னல்குவன நல்கி யோம்பு
நற்றவத்தோர் பரவுதிருக் கைலாய பரம்பரையி னுளு மன்னி. (3)

மன்னியவைந் தெழுத்தோதி வழிமுறையாய்த் தவிசேறி மகுடஞ் சூடி
முன்னவர்க ணெறியொழுகி யறங்காத்து வைதிகமா முதிய சைவ
மென்னுமொரு பெருஞ்சமயத் துறைநின்றே யதுவிளங்க விறைவன் றொண்டர்
சொன்னதிரு முறையாய கலைபலவுந் திகழ்தமிழுந் துலங்கப் பேரூற்றி. (4)

போற்றிவரு வோர்க்குமுனம் புகலியூர்கோன் றமிழ்க்கிரங்கிப் பூத மொன்றால்
நாற்றிசையும் புகழ்பரவ நல்கியபொற் கிழியளித்த நம்பன் பொற்றெண்
டேற்றருளி யித்துவந்தின் பிசைகொளும்அம் பலவாண ஏந்த லுள்ளத்
தூற்றமிக வருணமச்சி வாயவழித் தேசிகனு ஸூழி வாழ்க. (5)

சித்திரபானுஹூ
தைத்திங்கள்
28உ

ஆக்கியோன்

உ. போ. முத்துராமலிங்கம் பிள்ளை,

(கடையநல்லூர்) "வள்ளி வேட்கை" ஆசிரியர், தூத்துக்குடி.

திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனத்தில் எழுந்தருளியுள்ள

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் திருவடிகட்கு

சமர்ப்பித்த வாழ்த்துப்பா.

★

குருவணக்கம்

திருவாவடுதுறைத் திருவார் மடந்தனில் அருளுருவாயமர் அருணமச்சிவாயக்
குருவின்ஞானக் குணமார் அடிமலர் மருவியேத்தி மலமாசகற்றுவாம்.

(1) பூமன்னு பொன்மகளும் புகழ்மன்னு
நாமகளும் பொற்பாய் மன்னும்
பாமன்னு நாவலரும் பண்பாருஞ் செல்வர்களும்
பயின்று வாழும்
தேமன்னு காவளமு மதனருகிற் செந்நெல்
வளஞ் சீர்பெற்றோங்கும்
மாமன்னுங் காவிரிபாய் சோணாட்டின்
மாதலமா மகிமைபெறு நகரமாகும்.

(2) சீர்பெருகு மாவடுதண் டுறையென்னுந்
திருநகரிற் திருக்கைலாயப்
பேர்மன்னு பரம்பரையிற் பெருங்குருவாய்ப்
பிரானருளைப் பெற்று வாழும்
நார்பெருகு நமச்சிவா யக்குருவின்பரம்
பரையி னண்ணியாரும்
ஏர்பெருகு மம்பலவா ணப்பெயர் கொணற்குரு
வே யிசையார் தேவே.

(3) கங்கைமதி யணிந்தபிரான் றன்கோவிற்
பணிகளெலாங் கவினவாற்றி
மங்கையமர் பாகத்தான் மல்லல்விழாவணி
யதனை மாண்பாய்ச் செய்து
சங்கரன்றனருள் தன்னைச் சாலவேயெடுத்
துரைக்கத் தக்கோர் தம்மால்
இங்கிதமா யிசைத்தருள இசைத் தருளி
எல்லோரும் ஏத்துந் தோன்றால்.

(4) நன்மையுறு குருவடைந்த நற்றினத்தில்
நானிலத்தோர் நவின்று ஏத்தத்
தன்மையுறு மாபூசை தகுதிபெறப் புரிந்தருளித்
தகுதிசான்ற
வன்மையுறு மரனடியார்க் கின்னமா
தானமும் வழங்கி யன்பாய்
இன்பமுறு சிவிகையினி லெழுந்தருளி
யெழில்வீதி யிலங்க வந்து.

(5) நலந்தருமா மண்டபத்தி லெழுந்தருளி
நன்முனிவர் நன்கார் பூசைத்
தலம்பெறவே செய்துவந்து தம்மடிகள்
போற்றிசைப்பத் தண்ணருளையீந்து
வலந்தருநற் புலவோர்க்கும் வளமுறுநல்
லடியவர்க்கும் வளமார்தூசும்
மலர்ந்தமுகத் தினிதளித்து மாண்புறவே
யருள்செய்து மகிழும் வள்ளால்.

(6) அந்தணர் சூளாமணியா மருண்ஞான
சம்பந்தர்க் காயிரம்பொன்
தந்தருள் செய்தமர்ந்தபிரான் தன்னரு
ளின்றிறன் தனுற் றரணிதன்னில்
எந்தமக்கு மருள்செய்து எழில்ஞானம்
பாலித்து இசையே பெற்று
பந்தமறு நின்பாத பங்கயந்தான்
பல்லூழி வாழ்க மாதோ.

சித்திரபானுஹூ
தைமீ 29உ

அன்பார்ந்த

ஆ. முத்துச்சட்டைநாத தேசிகன்,

வேதாரணியம் ஆதீன வித்துவான்.